விலை ரூ. 5.00 பக்கங்கள் பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

சங்கு03 வள்ளுவர் ஆண்டு 2033 தை 05 வெள்ளிக்கிழமை (18.01.2002) தொலைபேசி 3378 ஒலி 30

மல்லிகா
மல்லிகா மிக்சர் மாளிகை
காரமான சுவையுடன்
ரேஸ்ரி பொம்பே ரீப்பீஸ்
ரேஸ்ரி றைற்றானிக் காரவடை
ரேஸ்ரி மரவள்ளி பீஸ்
இல.149, மின்சார நிலைய வீதி
(பஸ் நிலையம் அருகே)
யாழ்ப்பாணம்





யாழ் பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுவதையும் பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், பொங்கு தமிழ் நினைவாக வெளிச்சக்கூடுகளை விடுவதை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம் (படங்கள் - கோபி)

## மார்ச்சில் உள்ளூராட்சித் தேர்தல்

# புலிகள் மீதான தடை நீக்கம்

# உடனடிச் சாத்தியமில்லை!

### அரச உயர்மட்டத் தலைவர்கள் கருத்து

(நமது நிருபர்)

**இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்து செல்வதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை இலங்கையரசு உடனடியாக நீக்குவதற்கு உரிய சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை என ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

நோர்வே அரசின் அனுசரணையுடன் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற உள்ள அமைதிப்பேச்சுவார்த்தை சுமூகமான முறையில் நடைபெறுவதற்கு ஏற்ற வகையில் புலிகள் மீதான தடையை அரசு உடன் நீக்க வேண்டும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் வேண்டுகோள் விடுத்திருந்தார். இவ் வேண்டுகோளின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் மீதான தடையை உடனடி யாக நீக்கும் சாத்தியம் இல்லை என்று ஐக்கிய தேசிய முன்னணி அரசின் உயர்மட்டத் தலைவர்கள் பலர் சூசகமாக கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா

(12ம் பக்கம் பார்க்க)

## யாழ் பல்கலைக்கழக சமூகத்தால்

### நல்லை ஆதீன கலாமண்டப திறப்புவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லையாதீன கலா மண்டப திறப்பு விழா இன்று காலை 8.30 மணிக்கு ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகளின் தலைமையில் நடைபெற்று சுவாமிகளினால் திறந்து வைக்கப் படும்.

தொடர்ந்து விருந்தினர்களின் உரைகளும் மாலை கலை நிகழ்வுகளும் இடம்பெறும் (ந)

## விலை உயர்வை கண்டித்து இன்று பூரண ஹர்த்தால்

### புளொட் அமைப்பு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் திடீரென ஏற்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களின் விலையுயர்வைக் கண்டித்தும், அதனைத் தடுத்து விலைக் கட்டுப்பாட்டை பேண வேண்டும் என்று கோரியும் இன்று யாழ் குடாநாட்டில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட உள்ளது.

இக் ஹர்த்தாலை ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி துள்ளது. இதுகுறித்து அவ்வமைப்பு பத்திரிகைக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த இருபது வருடங்களாக தொடர்ந்து கொண்டிருக்கும் போரினால் பலவிதமான உடல் உள தாக்கங்களுக்கு உள்ளாகி விரக்தியின் விளிம்பில் வாழ்ந்து வரும்

கப்பட் உள்ளது.

இக் ஹர்த்தாலை ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) அமைப்பு ஏற்பாடு செய்

தாக்கங்களுக்கு உள்ளாகி விரக்தி யின் விளிம்பில் வாழ்ந்து வரும்

(3ம் பக்கம் பார்க்க)

யாழ் பல்கலைக்கழக சமூகத்தால்

# பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு

# உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக சமூகம் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் ஓராண்டு நிறைவை நேற்று மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டித்தது

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் இ.கயேந்திரன் தலைமையில் எழுச்சி நிகழ்வு காலை 9.38மணிக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் ஆரம்பமாகியது. பொங்குதமிழ் நிகழ்வை யொட்டி வளாகமெங்கும் சிவப்பு மஞ்சல் கொடிகள் கட்டப் பட்டிருந்தன நிகழ்வை நினைவு கூரும் .வாசகங்கள் அடங்கிய சுலோகங்கள் பதாதைகள் ஆங்காங்கே கட்டப்பட்டிருந்தன.

நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பீடாதிபதிகள், பல்கலை மற்றும் பாடசாலை மாணவர்கள் பல் கலைக் கழக ஊழியர்கள் யாழ் மாவட்டத்தை சேர்ந்த அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும்.

(12ம் பக்கம் பார்க்க)

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

# இந்திய அரசியல் விற்பன்னர் மார்க்கிய வல்லி போன்றவர்

## இந்துஸ்தான் ரைம்ஸ் புகழாரம்

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பால சிங்கம் அரசியல் சாணக்கியர் மார்க் கிய வல்லியை போன்றவர் என இந்தியாவில் இருந்துவெளியா கும் ''இந்துஸ்தான் ரைம்ஸ்'' பத்தி ரிகை வர்னித்துள்ளது அப்பத்தி ரிகையில் நேற்று முன் தின பதிப்பில் மேற்கண்டவாறு அன் ரன் பாலசிங்கம் வர்னிக்கப்படுள்ளார் அச்செய்தியில் மேலும் தெரி விக் கப்பட்டிருப்பதாவது இந்தியாவில் தங்கியிருந்து இலங்கை அர சாங் கத்துடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட இந்திய அரசிடம் அனுமதி பெற பலவழிகளை கையாளும் அன்ரன் பாலசிங்கம் ஒரு காலத்தில் இந்திய அமைதிப் படையின் போர்க் குற்றங்களை வெளிப்படுத்த இலங்கை அரசுக்கு அழுத்தங் கொடுத்தவர்

(12ம் பக்கம் பார்க்க)

## அமைச்சு அலுவலகம் இன்று திறப்பு

(கொழும்பு)

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அமைச்சுப் பொறுப் புக்களை இன்று காலை பம்பலப் பிட்டியிலுள்ள தனது அமைச்சு அலுவலகத்தில் வைத்து உத்தி யோக பூர்வமாக பொறுப்பேற்க உள்ளார்.

இதேவேளை இந்து கலாசார அமைச்சு அலுவலக திறப்பு விழா வும் அமைச்சர் தலைமையில் இடம்பெற உள்ளது இந் நிகழ்வில் அமைச்சர்கள் பலரும் கலந்து கொள்ள உள்ளனர். (ந4)

## புலிகளின் தடையை நீக்குக

# மட்டக்களப்பில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ரத்தச்செய்து விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும் என்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு இந்தியா தளமாகச் செயற்படும் என்றும் கோரி மட்டக்களப்பு மாவட்ட உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து இன்று ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடத்த உள்ளன.

இந்த ஆர்ப்பாட்ட பேரணியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்ளவுள்ளனர் இப்பேர ணியில் பெண்களுக்கெதிரான வன் முறைகள் நிறுத்தப்படவும் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு சலுகைகள் வழங்காமல் உரிமைகளை வழங்கவும் சோதனைச்சாவடிகளில் கெடுபிடிகள் தளர்த்தப்படவும் வேண்டும் என்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளது. (வ)

## அரசியல் நிர்ணய சபைக்கு

# தமிழ்க்கட்சிகளின் சார்பில் நீதியரசர் சுந்தரலிங்கம்

(கொழும்பு)

அரசியல் நிர்ணய சபைக்கு தமிழ்க்கட்சிகளின் சார்பில் ஓய்வு பெற்ற நீதியரசர் ரீ.சுந்தரலிங்கத் தின் பெயரை தமிழ்க்கட்சிகள் ஏகமனதாக சிபார்சு செய்துள்ளன அரசியல் நிர்ணயசபை தொடர் பான கூட்டம் நேற்றுக்காலை பாரா ளுமன்றக் கட்டிடத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமை யில் நடைபெற்றது.

இக்கூட்டத்திலேயே ஓய்வுபெற்ற நீதியரசர் சுந்தரலிங்கத்தின் பெயர் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாக

(12ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொருட்களின் விலை உயர்வால் பலரும் பாதிப்படைந்துள்ளனர்

## ஹர்த்தாலுக்கு ஆதரவாக சுபத்திரன் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடா நாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள விலை உயர்வைக் கண்டித்து இன்றுநடைபெறவுள்ள ஹர்த்தால் மற்றும் சாத்வீகப் போராட்டத்துக்கு ஈ. பி. ஆர். எல். எவ் (வரதர்அணி) தமது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கட்சியின் யாழ் அமைப்பாளரும்மாநகர சபை உறுப்பினருமான த. சுபத்திரன் பத்திரிகை அறிக்கையொன்றை அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

2002இல் யாழ்குடாநாட்டு மக்களின் பொருளாதாரச் சுமைகள் நெருக்கடிகள் பெருமளவுக்கு குறையும் என்றும் பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால்அந்தஎதிர்பார்ப்புக்கள் எல்லாம் கானல் நீராகிப் போய்விட்டதாகவே யாழ்ப்பாணத்தில் விஷம்போல் ஏறிவிட்ட விலைவாசி உயர்வுகள் காணப்படுகின்றன.

குறிப்பிட்ட ஒரு சில வர்த்தகர்கள் இந்த தட்டுப்பாட்டு நிலையை தமது பதுக்கல் நடவடிக்கைகளுக்கும் விலைவாசிகளை ஏற்றி கொள்ளை இலாபம் அடிக்கும் நடவடிக்கைகளுக்கும் பயன் படுத்தத் தவறவில்லை.



பொங்கல் யாழ்ப்பாணத்தில் களைகட்டியிருந்ததாக ஊடகங்களில் காட்டப்பட்டிருந்தாலும் உண்மை அதுவாக இருக்கவில்லை குடாநாட்டின் பல கிராமங்கள் அகதி முகாம்கள்களையிழந்து காணப்பட்டன. இந்த விலைவாசி ஏற்றத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் அகதி முகாம்களில் வாழ்பவர்கள் மீனவர்கள் விவசாயிகள் நகர கிராம நாளாந்த கூலி தொழில்செய்வோர்அரச வங்கி தனியார் துறை ஊழியர்கள் என பலதரப்பட்டோரும் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போதைய விலைவாசி ஏற்றத்தை அவர்களின் ஊதியம் தாக்குப்பிடிக்கமுடியவில்லை. யாழ் குடா நாட்டு மக்களின் தற்போதையஅவசியத்தேவை தாராளமாக அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதற்கு வழி செய்வதாகும்.

அரசு இதில் கூடிய கரிசனை காட்ட வேண்டும்மற்றும்அரச சார்பற்ற நிறுவனங்கள் மனிதாபிமான ஸ்தாபனங்கள் வர்த்தகர் சங்கங்கள், நுகர்வோர் சங்கங்கள்யாழ்ப்பாண மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் பாராளுமன்றபிரதிநிதிகள் அரசியல் கட்சிகள் உடனடியாக இப்பிரச்சினைக்குத்தீர்வு காணமுயல வேண்டும்.

★ இந்த அசாதாரண விலை உயர்வின் உண்மையான பின்னணி கண்டறியப்படல் வேண்டும்

★ பதுக்கல் பேர்வழிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு யாழ்ப்பாணத்திற்கான அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தில் காணப்படும் ஏகபோகம் களையப்படல் வேண்டும்.

★ விநியோகத்திலும் நியாய பூர்வமான விலையில்தட்டுப்பாடின்றி சகல மக்களுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க வழி சமைக்கப்பட வேண்டும்.

இந்த விலை உயர்வைக் கண்டித்தும் இந்தப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை காணுமாறு வலியுறுத்தியும் இன்று ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி முன்னெடுக்கும் சத்தியாக்கிரகப்போராட்டத்திற்கு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் பங்களிப்பதோடுமக்களும் ஆதரவளிக்க வேண்டும்என கேட்டுக்கொள்கிறோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## விழுது மேடை நாடகம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் வடமராட்சியில் நடத்தும் விழுது 2002 மேடை நாடக நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை நெல்லியடி ராஜலக்ஷ்மி திரையரங்கில் மு.ப 10மணிக்கும் மாலை 3 மணிக்கும் இருகாட்சிகளாக நடைபெறவுள்ளது (உ,106)

## மேலதிக பேருந்து சேவை

(ஏழாலை)

யாழ்ப்பாணத்தில் இருந்து குரும்பசிட்டிக்கு மேலதிகமாக ஒருபேருந்து சேவை இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது (எ-206)

## முணு முணுப்பு

ம்ம்... மலிஞ்சால் சந்திக்கு வரும் எண்டு கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் யாழ்ப்பாணத்திலே உச்ச விலை விற்கின்ற அதிமுக்கிய பொருட்கள் தான் சந்திக்கு வருகின்றது. என்னத்தைச் சொல்லுறனெண்டால் முக்கியமாக மண்ணெண்ணையைத்தான். என்னைப்போல ஏழைகள் கொட்டில் வீட்டுக்கு ஒரு விளக்கு வெளிச்சம் ஏற்றக் கூட முடியாத விலைக்கு இண்டைக்கு மண்ணெண்ணை போய்விட்டது. தேர்தல் நடந்து முடிந்து இப்ப ஆட்சி அமைத்துள்ள கட்சியை, இருமல் போய் தும்மல் வந்திருக்கிறதெண்டு சிலர் கூற பலர் கேட்டு உண்மைதான் எண்டு உவகையுற்றதைப் பார்த்திருக்கின்றேன். ஆனால் இந்தத் தாம்பரத்தான் சொல்லுறன்; தும்மல் இல்லை இருமும்போது அடிவயிறு நோகுற குக்கல்தான் இனி என் போன்றோருக்கு ஏற்படப்போகுது.

அகதிமுகாம் ஓட்டைக் கொட்டிலிலிருந்து தொழிலின்றி நிவாரணத்தையே நம்பிச் சீவிச்சுக்கொண்டு இந்த எலும்புக் கூட்டுக்குள் உயிரைப் பிடிப்பதற்காக; கால்வயிறு அரைவயிறு எண்டு நினைச்சால் பத்திஎரியுதையா. பத்தவைச்சு தம்மை வளப்படுத்துகினம். பாராளும் வேந்தனும் ஓர் நாள் பாவியாகி பரிதவிப்பான். ஏழை வயிற்றை எரியவைத்து குளிர்காய்வது நல்லலல்ல. என்னத்தைச் சொல்லுறது பணம், பொருள் படைத்தவன் படைக்கும் பிரச்சாரம் ஏலத்தில் விடப்படும் பொருளுக்குரிய கேள்வி அதிகமாகி; நெருப்பினில் கையை வைத்துச் சுட்டுக்கொண்ட பின்தான் இது நெருப்பெனப் புரியும். மாந்தராய் வாழ்கின்றோமே. யார் செய்த பாவமோ தெரியேல்ல. பாவத்தையும் புண்ணியத்தையும் கதைத்துப் பிரயோசனம் இல்லை. ஏனென்றால் நீதியும் நேர்மையும் தர்மமும் தற்கொலை செய்து பல வருடங்களாகிவிட்டது.

அடுத்த புதினம் என்னெண்டால் சில வருடங்களுக்கு முன்பு பொருட்களை விலைகூட்டி விற்பதற்கு அவைகளைப் பதுக்கிவைத்து அரைக்கிலோ தரளாம் ஒருலீற்றர் தரலாம் விலைதான் கூட என்றார்கள். இப்ப பொருட்களை வகை தொகையின்றி பார்வைக்கு வைத்துக்கொண்டே விலையை தனி ஒரு மனிதனாக நிர்ணயம் செய்கினம். இதற்கு அரச அதிகாரிகளின் அனுகூலமும்; அசமந்தப் போக்கும் உடந்தையாக இல்லாமலிருக்குமோ?. பார்த்தால் சண்டித்தன வியாபாரம் எண்டு சொல்லலாம்.

ஏன்? கேட்பதற்கு ஆளில்லை. நான் நினைக்கிறேன்! ஆறுவருடங்களாக வன்னியில் எங்களது சொந்தங்கள் படும் துன்ப துயரங்களை நினையாது? வந்ததே வாழ்வு வந்ததே சுதந்திரம் என்று குதுகலித்து, கும்மாளம் கொட்டியதன் பயன்போலும் வன்னியிலுள்ள மக்களை சிங்கள அரசாங்கம் குழந்தை முதல் குடுகுடு கிழவர் வரை வருத்திய படலம் எந்த மனுநீதியிலும் அடங்காது. ஆனால் மீண்டும் விழும் குண்டைத்தாங்க மாடிகள கட்டி மடியையும் கனக்கக் கட்டி; ஏழைகள், ஏதிலிகள் மீது எம்மவரே எமனை ஏவி விடுவதுபோன்று சீனி, அரிசி, மா, மண்ணெண்ணை போன்றவற்றிற்கு அர்த்தமற்ற முறையில் விலையேற்றி நினைத்த பாட்டில் விற்பது இம்மண்ணின் விடிவுக்கு இடமுண்டோ என யோசிக்கவைக்குது.

தர்மத்தைக் காக்காமல்; கடவுளை நினைத்து யாகம் செய்வதால் பயனேதும் உண்டோ இருந்து பார்ப்போம். ஒரு மூடை நெல்லைக் கொடுத்து பதிலாக ஒரு மூடை அரிசியை வரியாகப் பெற்ற அரசனை நல்லவனாக்க ஒரு மூடை உமியை, கொடுதது ஒருமூடை அரிசியைப் பெற்றுஅரசனாகாமல் இருந்தால் சந்தோஷமே.

தாம்பரத்தான்

## பெண்களும் சட்டத்தின் பங்கும்

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் பெண்களும் சட்டத்தின்பங்கும் என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று துன்னாலை தெற்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

பெண்களின் சட்ட உரிமைகள், பெண்களின் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் சட்டத்தின்முன் பெண்கள் போன்ற விடயங்கள் இக்கருத்தரங்கில் ஆராயப்படவுள்ளன

மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் தலலமையில் நடைபெறும்

இக்கருத்தரங்கில் சட்டத்தரணிகள் வி.ரி சிவலிங்கம் திருமதி பவானிசற்குணராசா ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (உ)

## ஆசிரிய நூலகர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் ஆசிரிய நூலகர் பதவிக்காக யாழ் பாடசாலைகளில் 45 வயதிற்குட்பட்ட ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவிக்கு அரசாங்கப்பாடசாலை ஒன்றில் 5 வருடத்திற்கு மேற்பட்ட சேவையுடைய பட்டதாரிகள் அல்லது 8 வருட சேவையைப் பூர்த்தி செய்த பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அல்லது 6 வருட சேவையைப் பூர்த்தி செய்த தேசிய கல்வியியல் டிப்ளோமா சான்றிதழுடன் ஆங்கில பாடத்தில் க.பொ.த.சாதாரணதரத்தில் திறமைச்சித்தி பெற்றிருக்கும் ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 23 ந் திகதிக்கு முன் யாழ் கல்வி வலயத்திற்கு சமர்ப்பிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

இப்பதவிக்கு ஒரு பாடசாலையில் இருந்து ஒரு ஆசிரியர் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். (ந)

## இலங்கைக்கு சகல வழிகளிலும் உதவ ருமேனிய நாடு தயார்

(கொழும்பு)

நாட்டில் முன்னெடுக்கப்படும் சமாதான நடவடிக்கைகளுக்கு ருமேனிய அரசு சகல வழிகளிலும் உதவும் என இலங்கைக்கான ருமேனிய தூதுவர் பெற்றோபெற்றா பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ. எச். எவ் அஷ்வரிடம் உறுதியளித்துள்ளது.

நேற்றுக்காலை அமைச்சரை சந்தித்த ருமேனியத் தூதுவர் பிரதமர் ரணிலின் சமாதான முயற்சிகளுக்கும் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் ருமேனியா உதவத் தயார் நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (உ-7)

## திருக்குறள் மனனப் போட்டி

(இணுவில்)

வலிகாமம் கல்வி வலயப்பாடசாலைகளில் தரம்4,5 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கிடையிலான திருக்குறள் மனனப் போட்டிகளில்கோட்டமட்டப் போட்டிஇம்மாதம் 31ஆம் திகதியும் வலய மட்டப் போட்டி எதிர்வரும் பெப்ரவரிமாதம் 17 ஆம் திகதியும் மு.ப 9 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது (செ.49)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் பிறந்ததின ஆன்மீக வாரத்தையொட்டி கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் இன்று காலை 8.30 மணிக்கு அதிபர் சு. சண்முககுமார் தலைமையில் பண்டிதை திருமதி வை. கணேசபிள்ளையின் சுவாமி விவேகானந்தர் பற்றிய சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (செ)

## குடும்பக்கட்டுப்பாட்டு கருத்துரை

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து நாளை காலை 9 மணிக்கு சங்கானை சுகாதார அதிகாரி பணிமனையில் சங்கானை, சண்டிலிப்பாய் பிரிவுகளைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் குறித்து கருத்துரை வழங்கவுள்ளனர். இந்நிகழ்வில் ரூபெல்லாத் தடுப்பூசி போடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## உழவு இயந்திர சில்லு ஏறி குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

உழவு இயந்திரத்தின் சில்லு ஏறியதில் நசியுண்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுஅச்சுவேலி தோப்புப் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வரதலிங்கம் சத்தியசுதன் (வயது21) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். (இ-10)

# தமிழர் சுயநிர்ணய உரிமை பெறும் வரை

# பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகள் அவசியம்

## யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

2001 ஆம்ஆண்டுதைமாதம் 17ஆம் திகதி தமிழ் மக்களின் இதயங்களை ஒன்றிணைத்து தங்களின் உணர்வுகளை அபிலாசைகளை, வெளிக்கொணர்ந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒருநன்நாள். அதற்கு நிகர் 'பொங்குதமிழ் தான்' யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் ஏற்பாடாகி இருந்த நிகழ்விற்கு மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் தனது பூரண ஆதரவை வழங்கியது குறிப்பிடத்தக்கது.

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் நேற்றையதினம் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அனுஷ்டிக்கப்பட்ட பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டஅறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது ;

எமது அபிலாசைகளை வென்றெடுக்கும் நாள் வெகுதூரத்தில்இல்லை என்பதை பறைசாற்றிய நாள். இரசாயன நச்சு ஆயு த்தால் ஒரு இனத்தை அழிக்கலாம், அடிமைகளாக்கலாம்,மழுங்கடிக்கலாம் மொழியை நசுக்கலாம். நாம் அடக்கப்படுகின்றோம் என்ற உணர்வையும் எமது தன்மானத்தையும் எல்லோர் மனங்களிலும் ஏற்படுத்திய நாள் இவற்றை எமக்கு புலப்படுத்த நாம் விடுதலை பெற்ற இனமாக சுயநிர்ணய உரிமையுடன்கௌரவமாக வாழவேண்டும் என்ற ஆள்மன உணர்வுகளையும் நசுக்கும் தங்களது அபிலாசையான விடுதலை கிடைக்கும்வரை எந்தவொரு ஆயுதத்தாலும் அழிக்க முடியாது என்பதை நாம்அறிவோம் சுதந்திரம் எமது பிறப்புரிமை என்பதையும்பொங்கு தமிழ் எழுச்சி எமக்கு ஏற்படுத்தியது.

எனவே நினைவுகூரும் இவ் பொங்கு தமிழ் எழுச்சி நன்நாளில்ல எமது இதயஉணர்வை ஒன்றாகவெளிக்கொணர்வோம் இதேபோன்று எழுச்சி நிகழ்வுகள் காலத்திற்கு காலம் தொடர்ந்துசகல மக்களும் இணைந்து சுமுக நிலை கிடைத்து நாம் கௌரவத்துடனும், சுயநிர்ணய உரிமையுடனும் வாழும் வரை இவ் அலைகள் ஓயக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## யாழ் வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் போன்ற மாவட்டங்களில் இருந்து யாழ். வலயத்திற் குட்பட்ட பாடசாலைகளுக்கு மாற்றம் பெற்றுவரும் ஆசிரியர்களை யாழ். வலயத்தில்உள்ள ஆசிரியர்நிர்வாகக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப் பணிப்பாளர் மகாலிங்கம் தெரிவித்துள்ளார்

இவ்வாறு தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப் பட்டவர்களின் பெயர்கள் வருமாறு,

சா. தவக்குமார்
கா, சசிதரன்
ப. பரமேஸ்வரம்பிள்ளை
அ. வ. ஆனந்தராசா
அ. சா. மரியாம்பிள்ளை
சி. சிறிகாந்தன்
வ. சோமசுந்தரம்
கே. தனபாலசிங்கம்
சூ. தம்பிராசா
தி. யசோதா
ச. வேல்அழகன்
வே. சிவதர்சினி( உ-10)

## சைக்கிள் ஓட்ட போட்டி முடிவுகள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தால் பொங்கல் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்டவர்களின் பெயர் விபரம் வருமாறு,

1-ஆம் இடம்
க. கமலேஸ்வரன்
கொக்குவில் மேற்கு

2-ஆம் இடம்
நா. பாலச்சந்திரன்
காரைநகர்

3-ஆம் இடம்
தே, றதீஸ்குமார்
நாரந்தனை மத்தி

(செ-75)

## மாணவர் மயங்கி வீழ்கின்றனர்

(இணுவில்)

மாவிலை அதிகரிப்பு பாண் விலை அதிகரிப்பு ஆகிய காரணங்களால் கிராமப்புற பாடசாலைமாணவர்கள் காலை வேளையில் உணவுஉட்கொள்ளாது பாடசாலைக்கு வருவதனால் மயங்கி விழும் சம்பவங்கள் இடம்பெறுகின்றது என ஆசிரியர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது (செ)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புற நிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் சுஜாதா எழுதிய கதையொன்றை மூலமாகக் கொண்டகாந்தி கிருஷ்ணா இயக்கிய 'நிலாக்காலம்' எனும் திரைப்படம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் கலந்து கொள்ளலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (செ)

## வருடாந்த பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை மு. ப 10.30 மணிக்கு மேற்படி சங்கத்தின் தலைவரும் வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளருமான வி.பாலசிங்கம் தலைமையில்யாழ்இந்துக் கல்லூரியில்நடைபெறவுள்ளது.

வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்காக தனிநபர் பிரேரணைகள் ஏதும் இருப்பின் அவற்றை முறையாக இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்துமூலம் செயலாளர் யாழ் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கம் 424'1/1 கில்னர் லேன் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் செயலாளர் சு. சிறீகாந்தன் கேட்டுள்ளார். (உ-106)

## விலை உயர்வை

வடகிழக்கைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்கள் அண்மையில் விடுதலைப்புலிகளுக்கும் அரசிற்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்தத்தின் மூலம் ஓரளவு மனநிம்மதி அடைந்திருக்கின்றனர்.

இவ்வேளையில் யாழ் குடாநாட்டில் சகல அத்தியாவசிப் பொருட்களும் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக பலமடங்கு விலை அதிகரிப்பும் பதுக்கல் வியாபாரமும் தொடர்ந்து கொண்டு வருகிறது இதை தக்கண்டித்து' உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பல பொது அமைப்புகள் பத்திரிகைகள் மூலமாக கோரிக்கை விட்டிருந்தும் எல்லாவற்றிற்கும் மேலாக யாழ்-வணிகர் கழகம்இருமுறைபத்ரிகைவாயிலாககோரிக்கை விட்டிருந்தும் இப்பொருட்கள் விலையேற்றம் குறைந்ததாகவோஅல்லது பதுக்கல் வியாபாரம் நின்றபாடாகவோ இல்லை.

இந்நிலையிலேலே இது சம்பந்தமாக எமது அமைப்பு அரச அதிபருக்கு கடந்த 12.01.02 சனிக்கிழமையன்று ஒரு கடிதம் அனுப்பியிருந்தது. இது வலம்புரி உதயன் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அக்கடிதத்தில் இன்னும் ஓரிரு தினங்களில் இது சம்மந்தமாக நடவடிக்கை ஏதும் எடுக்காத பட்சத்தில் வெகுஜனப் போராட்டம் ஒன்று நடாத்தப்படும் என்று அறிவித்திருந்தோம்.

குறிப்பிட்ட காலப்பகுதியில் நடவடிக்கை ஏதும் எடுக்காத பட்சத்தில் மீண்டும் அரச அதிபருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் இவ்விடயம் தொடர்பாக எதுவித உறுதிமொழியும் தன்னால் தரமுடியாதிருப்பதாக கூறினார்.

இதனால் வேறு வழியின்றி மேலதிக பொருளாதார சுமைகளால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களின் மனக்குமுறலை சம்மந்தப்பட்டவர்களுக்கு வெளிப்படுத்த ஒரு அரசியல்கட்சி என்ற ரீதியில்'

ஜனநாயக வரம்புக்குட்பட்ட வகையில் ஒரு காத்திரமான எதிர்ப்பைத் தெரிவிக்கவும் இனியாவதுஇவ்விடயத்தில்சம்மந்தப் பட்ட அமைச்சுகள் திணைக்களங்கள் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காகவும் இன்றைய இந்த சாத்வீகப்போராட்டத்திற்கு நாம் நிர்பந்திக்கப்பட்டுள்ளோம்.

### வணிகர் கழகத்திற்கு

கடந்த 20வருடங்களாக யாழ் வணிகர் கழகமானது பலவித இன்னல்கள் துன்பங்கள் போர்ச் சூழல்கள் மத்தியில் நுகர்வோருக்கு பாரிய பாதிப்புக்கள்ஏதும் ஏற்படாத வகையில் நியாயமான விலைகளில் பொருட்களை வழங்கி வந்தது இதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

1990ம் ஆண்டிற்குப் பின்பு முளைத்துள்ள சிலவன்செயல் வியாபாரிகள் கள்ளச் சந்தைகளை உருவாக்கியும் பொருட்களின் விலைகளை பலமடங்காக அதிகரித்து விற்பனை செய்வதுமான செயலானது நேர்மையுடன் செயற்பட்டு வரும் சகல வர்த்தகர்களுக்கும் ஒருகெட்ட பெயரை ஏற்படுத்தும் செயலாக உள்ளது எனவே இது விடயத்தில்யாழ் வணிகர் கழகம் தலையிட்டு சம்மந்தப் பட்ட கள்ளச்சந்தை ராஜாக்களை ஓரம்கட்டுவதற் குமுயற்சி செய்வதுடன் வணிகர் கழகத்திற்கும் நுகர்வோருக்குமிடையில் நல்ல புரிந்துணர்வு ஏற்படுத்த வழிவகுக்க வேண்டும்.

இதனால் தங்களுக்கு ஏற்படும் இடையூறுகளுக்கு எமது மனவருத்தங்களை தெரிவித்துக் கொண்டு இப்போராட்ட நடவடிக்கைக்கு ஆதரவாக சகல வர்த்தகஸ்தாபனங்களையும் பூட்டி ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்வதுடன் அனைத்து மக்களும் தங்கள் அன்றாட செயற்பாடுகளை நிறுத்தி மக்களை ஏமாற்றிச் சுரண்டும்பேர்வழி களுக்கு எமது பலமான எதிர்ப்பை தெரிவிப்பதுடன் காலை8.00 தொடக்கம் மதியம் 1.00மணிவரை யாழ் செயலகம் முன்பாக ஒருசாத்வீக அமர்வுப் போராட்டத்திலும் ஈடுபட அனைவரும்அணிதிரளுமாறும் கேட்டுக்கொள்கிறோம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

## குறைந்தளவான தபால் பொதிகளே திருமலையில்

நேற்றைய தினம் காங்கேசன்துறை வந்தடைந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க நோயாளர் கப்பலில் குடாநாட்டிற்கான வெளியூர் தபால்கள் அடங்கிய 713 பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் அதே சமயம் குடாநாட்டில் சேகரிக்கப் பட்ட 43பொதிகளும் அக்கப்பலில்அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தபால்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் சொற்ப அளவான பொதிகளே திருமலையில் உள்ளதாகவும் அடுத்த வாரம் இப் பொதிகள் முழுவதும் எடுத்துவரப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-10)

## புதிய ஜனநாயக கட்சி ஹர்த்தாலுக்கு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

புளொட் அமைப்பினரால் இன்றுஏற்பாடு செய்யப்பட்டுள பூரண ஹர்த்தாலுக்கு ஆதரவுதெரிவித்து புதிய ஜனநாயகக் கட்சி அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழ் மாவட்டத்தில் தொடர்ந்தும் மக்களது அத்தியாவசியப் பாவனைப் பொருட்களின் விலை ஏறிக்கொண்டே செல்கிறது. இதனால் சாதாரண ஊழியர்கள் முதல் அன்றாடம் உழைத்து வாழும் மக்கள்வரை தமது வருமானத்தைக் கொண்டு இப் பொருள்களைக்பெறமுடியாதநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்

யுத்த சூழலில் கூட ஓரளவு நிதான விலைக்கு பெறக்கூடியதாக இருந்த பொருள்கள் தற்போது இருமடங்கு மும்மடங்காக உயர்ந்துள்ளது தனியார் வர்த்தகர்கள் தாம்விரும்பியபடி இடத்துக்கு இடம் விலைகளை உயர்த்தி விற்கும் நிலை இன்று யாழ் குடாநாடெங்கும் பரவலாகக் காணப்படுகின்றது

அத்துடன் பதுக்கலும் ஊழலும், கொள்ளை லாபமும் மக்கள்நலனில் அக்கறையற்ற போக்கும் எங்கும் வளர்ந்து செல்லும் நிலை காணப்படுகிறது.

எனவே சாதாரணமக்களின் வயிற்றில் அடிக்கும் இச்செயலை எமது புதிய ஜனநாயகக்கட்சிவன்மையாககண்டிப்பதுடன் இவற்றை எதிர்த்து நடைபெறும் ஹர்த்தாலை ஆதரிக்குமாறு அனைத்துமக்களையும் வேண்டிக் கொள்கிறோம் என்றுள்ளது (உ)


சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

### வருடாந்த பொதுக்கூட்டம்

காலம்:- 27-01-2002 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- 9-00 மணிக்கு
இடம் :- திருஇருதயக்கல்லூரி மண்டபம் நெல்லியடி

அமரர் ச. நமசிவாயம் புலமைப்பரிசில் நிதி மாணவர்களுக்கு கையளித்தல்.

2002ஆம் ஆண்டு புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெறும்.

வணிகநிலைய 2ம்கட்ட நிதிக் கொடுப்பனவுக்கான பெயர்கள் அனுப்பவேண்டியுள்ளதால் அங்கத்தவர்கள் மட்டும் தவறாது கலந்து கொள்ளவும்.

பிரேரணைகள், அபிப்பிராயங்கள் எதுவும் இருந்தால் 22-01-2002ம் திகதிக்குமுன் எழுத்து மூலம் மன்றில் சமர்ப்பித்து சம்மந்தப்பட்டவர் தவறாது பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளவும்.

ந. சிவபாலன்
செயலாளர்
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

(4245)

### ஆப்கானில் கைது செய்யப்பட்ட

# தலிபான் போராளிகள் மீது அமெரிக்க இராணுவம் சித்திரவதை

(லண்டன்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படையினரால் கைது செய்யப்பட்ட அல்கெய்டா மற்றும் தலிபான் போராளிகள் கியூபாவிலுள்ள அமெரிக்க இராணுவ முகாமொன்றில்வைத்துசித்திரவதைக்குட்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் சித்திரவதைக்குட்படுத்தப்படுவது தொடர்பாக தாம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாக அகதிகளுக்கான ஐக்கியநாடுகள்சபையின் ஆணையர் மேரி றொபின்சன் தெரிவித்துள்ளார்.

இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அமெரிக்கா விசாரணைகளை நடத்த வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் யுத்தக் கைதிகளாக நடத்தப்படவேண்டும். விசாரணைகளில் குற்றவாளிகளென காணப்படும்வரை அவர்கள் நிரபராதிகள் என்றே கருதப்பட வேண்டுமென்று நேற்று முன்தினம் கியூபாவில் அவர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுள் 3 பிரிட்டிஷ் பிரஜைகளும் அடங்குவர்.

இந்தக் குற்றச் சாட்டுக்களை பிரிட்டனும் அமெரிக்காவும் முற்றாக மறுத்துள்ளன. (உ-5)

## குடும்பத்துடன் இணைந்து உணவு உட்கொண்டால் மனவளர்ச்சி அதிகம்

(லண்டன்)

வாரந்தோறும் 5தடவை அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் குடும்ப அங்கத்தவர்களுடன் உணவு உண்ணும் இளைஞர்களின் மனவளர்ச்சி அதிகமாக இருக்குமென்று லண்டன் ஆராய்ச்சி நிலையம் ஒன்று தெரிவித்துள்ளது.

குடும்பத்துடன் உணவை உட்கொள்ளாமல் தனிமையாக உணவை உட்கொள்வதால் இளைஞர்களின்மனதில் தளர்ச்சி ஏற்படுவதோடுஇவர்களின் எதிர்காலம் பெரும் பாதிப்படைகிறது.

இங்கிலாந்தின் 'ஜேனலக்ஸ் கமினியூட்டியஸ்' என்ற அமைப்பு நடத்திய ஆராய்ச்சியில் இவ்வுண்மை புலப்பட்டுள்ளது.

சுமார் 259இளைஞர்கள்இவ் ஆராய்ச்சிக்குட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

# உலக தரிசனம்

### பொது மக்களை அடித்துக் கொன்ற

## பொலிஸார் மூவர்க்கு ஆயுள் சிறைத்தண்டனை

(புதுடில்லி)

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3பேர் பொலிஸாரால் அடித்துக் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக 5 பொலிஸாருக்கு ஆயுள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆண்டுகளுக்கு முன்னர் போதை மருந்து விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரும் மேற்படி பொலிஸ்காரர்களால் அடித்துக் கொலை செய்யப்பட்டமை நிரூபிக்கப்பட்டதையடுத்து அவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பை மனித உரிமை அமைப்புக்கள் பல வரவேற்றுள்ளதுடன்,

பொலிஸாரின் காவலில் இருக்கும்போது இடம்பெறும் மரணங்களின் எண்ணிக்கை அதிர்ச்சியூட்டும் விதத்திலேயே இருந்து வருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-5)

## விளையாட்டு செய்திகள்




### 11 தொடர்களில் வென்று ஆஸி. அணி சாதனை

கிரிக்கெட் உலகில் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் சம்பியனாக வீறுநடைபோடும் அவுஸ்திரேலிய அணி, 11 டெஸ்ட் தொடர்களில் சகல போட்டிகளையும் வென்று சாதனை புரிந்துள்ளது.

அவுஸ்திரேலிய தென்னாபிரிக்க அணிகள் அண்மையில் மோதிக் கொண்ட மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை வென்றதன் மூலம் அவுஸ்திரேலியா 11 தடவைகள் டெஸ்ட் தொடர்களில் சகல போட்டிகளையும் வென்றசாதனையை உரித்தாக்கிக்கொண்டுள்ளது. (உ-10)

### பங்களாதேஷ் அணி தோல்வியை தழுவியது

(பாகிஸ்தான்)

பாகிஸ்தான்-பங்களாதேஷ் அணிகளுக்கிடையே நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 1 இனிங்ஸ் மற்றும் 178 ரன்கள் வித்தியாசத்தினால் வெற்றியீட்டியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி மிகக் குறைந்த ஓட்டத்திலேயே தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 9 விக்கெட் இழப்பிற்கு 490 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தியது.

இதில் அப்துல்ரஸ்ஸாக் 134 ஓட்டங்களைப் பெற்றார். 2வது இனிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி, 152 ஓட்டங்களைப் பெற்று தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியை தழுவியது. இதில் ஆட்டநாயகனாக அப்துல்ரஸ்ஸாக் தெரிவானார். (உ-10)

### கோட்ட மட்ட உதைபந்தாட்ட போட்டி

(சுண்டுக்குளி)

யாழ். மாவட்ட ரீதியில் கோட்ட மட்டத்தில் ஆசிரியர்களுக்கு இடையில் முதன் முறையாக நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டித் தொடரின், ஓர்அங்கமாக இடம் பெற்றஉதைபந்தாட்ட போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்த திங்கட்கிழமை இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் தென்மராட்சி வலய உடற்கல்வி உதவி அத்தியட்சகர் குமாரசாமி நெறிப்படுத்தலில் நடைபெற்றன.

முதலாவதாக இடம்பெற்ற 3 ஆம் இடத்திற்கான தெரிவு ஆட்டத்தில் கரவெட்டிக் கோட்ட அணியை எதிர்த்து தெல்லிப்பளைக் கோட்ட அணி ஆடியது.

கொடுக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் தலா இரு கோல்களை போட்டுசமநிலையில் இருந்ததனால் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக இரு அணிகளுக்கும் தலா 5 மேலதிக உதைகள் கொடுக்கப்பட்ட போது தெல்லிப்பளை அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிஈட்டி 3ஆம் இடத்தை தனதாக்கிக் கொண்டது.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற முதலாம் இடத்திற்கான ஆட்டத்தில் யாழ். கோட்ட அணி பலாலி ஆசிரியர்பயிற்சிக்கல்லூரி அணியை கடும் போட்டியின் பின் 2:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து இவ்வருட சம்பியன் ஆனது. (உ-10)

### விளையாட்டு போட்டிகள்

(மானிப்பாய்)

வலிதென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப கட்டமாக கபடி, துடுப்பாட்டப் போட்டிகள் முடிவடைந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்கள் முறையே நாளையும் நாளை மறுதினமும் கட்டுடை ஞானவைரவர் விளையாட்டுக்கழக மைதானம், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானம் ஆகியவற்றில் இடம்பெறவுள்ளன. (உ-120)

### பெண் வேடமிட்டவர் நீதிமன்றை அவமதித்தார்

(கோலாலம்பூர்)

மலேசிய நீதிமன்றத்தில் குட்டையான சட்டையும் உயர்ந்த குதிக்கால்செருப்பும் அணிந்து கொண்டு நீதிமன்றை அவமதித்த ஒருவருக்கு நீதிபதியால் ஒருவார கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுளது.

மேற்படிநபர் ஆணாகஇருந்தும் பெண்ணைப் போல் நடந்துகெண்டார் என்பதனாலேயே இவருக்கு இத்தண்டனை விதிக்கப்பட்டது. (செ-7)

### கொலின் பவல் காபூல் விஜயம்

(வாஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில்இடைக்கால அரசு நியமிக்கப்பட்ட பின்னர் முதல் தடவையாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் நேற்று தலை நகர் காபூலுக்கு சென்றுள்ளார்.

25 வருடங்களின் பின்னர் ஆப்கானுக்கு பயணத்தை மேற் கொண்ட அமைச்சர் அங்கு நடை பெற்று வரும் புனர் நிர்மாண வேலைகளைப் பார்வையிட்ட தோடு இராணுவ நடவடிக்கைகள் சம்பந்தமான திட்டங்களையும் மீளாய்வு செய்துள்ளார். (எ-8)

### விமான விபத்து

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவுக்கு சொந்தமான போயிங்7-300 ரக விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் பயணி ஒருவர் உயிரிழந்ததுடன் 23பேர்காயமடைந்துள்ளனர்.

இந்தோனேஷியாவின் ஜாவா தீவில் தரையிறங்கமுற்பட்டபோது இந்த விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது. (உ-7)

### தேர்தல் இடாப்பில்

## குளறுபடி புரிந்த அதிகாரிகள் இடமாற்றம்

(சென்னை)

தேர்தல்இடாப்புகளில்குளறுபடி செய்த 8 தேர்தல்அதிகாரிகளை இடை நிறுத்தம்செய்யும்படி மத்திய அரசு மாநில அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் சைதாபேட்டை, வாணியம்பாடி தொகுதிகளின் தேர்தல் இடாப்புகளில் முறைகேடான பதிவுகள் செய்யப்பட்டுள்ளன வென்று எதிர்க்கட்சிகள் கொடுத்தபுகார்களை அடுத்து விசாரணைமேற்கொண்ட மத்திய அரசு 8 தேர்தல் அதிகாரிகள்மீதுகுற்றம்சுமத்தியுள்ளது

இதேவேளை கட்சிகள் பலவும் ஆண்டிப்பட்டி தொகுதி தேர்தல் இடாப்பு மோசடி தொடர்பாக எடுத்துச்சொல்லிய போதும் அங்கு தேர்தல் நடத்த அரசு தீர்மானித்திருப்பதை வன்மையாகக் கண்டித்துள்ளன. (து)

### அஸாம் மாநிலத்தில்

## தீவிரவாதிகளால் 13 பொதுமக்கள் கொலை

(புதுடில்லி)

அஸ்ஸாம் மாநிலத்தில் தடை செய்யப்பட்ட போடோ தீவிரவாத ஜன நாயக முன்னணி இயக்கத்தினால்,13 பொது மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இந்திய பூட்டான் எல்லையில் பெருமளவு இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, சம்பவம் நடந்த பகுதிகளில் பதற்றம் நிலவுவதாகவும் காவல்துறையினர் மிகுந்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

# உலகில் மனித உரிமைகள் மீறப்பட அமெரிக்க கொள்கைகளே காரணம்

### சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு குற்றச்சாட்டு

(ஜெனிவா)

பயங்கர வாதத்திற்கு எதிரானபோரில்அமெரிக்காதனது நிருவாக அமைப்புகளை முறைகேடானவழிகளில்பயன்படுத்துகிறது என்று சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

உலகெங்கிலும் மனித உரிமைகள் மீறப்படுவதற்கு அமெரிக்கக் கொள்கைகள் தூண்டுகோலாகஅமைந்துள்ளனஎன்று அதன் அறிக்கை தெரிவிக்கிறது

இதேவேளை,பயங்கரவாதத்திற்கெதிரான போர் மனித உரிமைகளைப் புறக்கணிக்க ஒருபுதியகாரணமாக அமைந்து விட்டன வென்றும்,

ரஷ்யா உஸ்பெஸ்கிஸ்தான் அரசுகளின் அரசியல் எதிரிகளைக் கைது செய்வது மற்றும் இராணுவ நடவடிக்கைகளுக்கு பயங்கரவாதம் என்ற போர்வையில் உதவுவதாகவும்அந்த மனித உரிமைகள் அமைப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆப்கான் போரில் உயிர் இழந்த பொது மக்கள் பற்றியும் அந்த அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (து)

## இன்று ஒரு தகவல்

### உயிரைக்கொடுக்கும் அன்பு

நபிகள் பெருமானிடத்துப் பேரன்பு கொண்டிருந்தார் கலிபா அபுபகீர் என்பவர். எதிரிகளிடமிருந்து தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள இருவரும் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஓட்டம் பிடித்தார்கள். பாலை வனங்கள் வழியாகச் சென்று கொண்டிருந்த அவர்களை எதிரி வீரர்கள் துரத்திக் கொண்டு வந்தார்கள். நபிகள் நாயகம் தம்தோழரைப் பார்த்து 'நாம் தப்ப வேறு வழியில்லை. அதோ தெரியும் குகைக்குள் சென்று ஒளிந்து கொள்வோம்' என்றார். பெருமானின் பேச்சை எப்பொழுதும் மீறியறியாத கலிபாவும் அவருடன் சென்று குகைக்குள் ஒளிந்து கொண்டார். குகைவாயிலிலிருந்து சிலந்தி விரைவாகக் குகை வாயிலைச் சுற்றி வலை பின்னியது. குகையருகே வந்தனர் வீரர்கள். அவர்களில் ஒருவன் இந்தக் குகைக்குள் நபிகள் ஒளிந்திருந்தாலும் இருக்கலாம்' என்றான்.

வீரர்களின் தலைவன் அவனைப் பார்த்து 'முட்டாளே குகைவாயிலைப்பார் சிலந்தி வலை அப்படியே உள்ளது. யாராவது உள்ளே சென்றிருந்தால் சிலந்திவலை அறுந்திருக்குமே. உள்ளே சென்று நேரத்தை வீணாக்க வேண்டாம். வெகுதூரம் தப்பிச் செல்வதற்கு முன் அவர்களைப் பிடிக்கவேண்டும்' என்றான். வீரர்கள் அனைவரும் அங்கிருந்து புறப்பட்டனர். நபிகள் குகைக்குள்ளேயே நன்கு உறங்கத் தொடங்கினார். கலிபா விழிப்புடன் காவல் இருந்தார். அப்பொழுது குகையிலிருந்த பொந்திலிருந்து கொடிய நச்சுப்பாம்பு வெளியே வருவதைப் பார்த்தார் கலிபா. பெருமானின் உறக்கத்திற்கு எந்த இடையூறும் வரக்கூடாது என்று நினைத்த கலிபா தன் வலது கால்பாதத்தை அந்தப் பொந்துக்குள் வைத்து நன்றாக மூடிவிட்டார். தான் வெளியே வரும் வழி அடைபட்டு விட்டதைக் கண்டபாம்பு கோபத்துடன் அவர் பாதத்தில் பல முறை கொத்தியது. ஏதோ சத்தம் கேட்டு உறக்கம் கலைந்த நபிகள், தள்ளாடிக் கொண்டே கலிபா மயக்கமாகிக் கீழே விழுவதைக் கண்டார். அவர் பாத இடைவெளி வழியாகப் பாம்பு வெளிப்படுவதையும் கண்டார்.

என்ன நடந்திருக்கும் என்பதை உணர்ந்த அவர் அந்தப் பாம்பை அங்கேயே அடித்துக் கொன்றார். பாம்பு கடித்திருந்த கலிபாவின் பாதங்களைத் தடவிக்கொடுத்தார். பெருமானின் கைபட்டதும் பாம்பின் நஞ்சு போன இடம் தெரியவில்லை. எதுவுமே நடவாதது போல மயக்கம் தெளிந்து எழுந்தார் கலிபா.

**பேராசிரியர் எ. சோதி**

# பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து மகாநாயக்க தேரர்களுக்கு விளக்கம்

(கொழும்பு)

நோர்வே சமாதானக்குழுவுடன் நடைபெற்றபேச்சுக்கள் குறித்துஅமைச்சர்கள்ஜி.எல். பீரிஸும், மிலிந்த மொறகொடவும் மகாநாயக்கதேரர்களுக்கு அண்மையில் விளக்கம் அளித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் நோர்வே அனுசரணையுடன் தொடர்ந்து நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து மகாநாயக்க தேரர்களுக்கும் ஏனையோர்க்கும் அறிவிக்கவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே இரகசியத் திட்டம் எதுவும் இல்லை என்பதை அவர்களுக்கு உணர்த்தும் அடிப்படையிலேயே இந்த விளக்கம்அளிக்கப்படவுள்ளது.

பேச்சுவார்த்தையின்போது சில கடினமான முடிவுகளை அரசாங்கம் எடுக்குமிடத்து சிங்களத் தீவிரவாதிகளின்கடுமையான எதிர்ப்புக்களைச் சந்திக்க வேண்டிவரும் என்றும் அவற்றுக்குமுகம்கொடுக்கும் விதமாகவே மகாநாயக்க தேரர்களுக்கும் ஏனையோர்க்கும் விளக்கம் அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## சமாதான நீதிவானாக நியமனம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இ.எஸ்.விஜயராசசிங்கம், யாழ்ப்பாணம்நீதி நிருவாக மாவட்டத்துக்கான சமாதான நீதிவானாக மல்லாகம் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் கடந்த28 ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

### பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு

## வரவு செலவுத் திட்ட நிதி வழங்குவது சந்தேகம்

(தென்மராட்சி)

திறைசேரியில் அரச நிதிக்குப் பெரும்தட்டுப்பாடு நிலவி வருவதால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி இவ்வருடம் வழங்கப்பட மாட்டாது என சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

அரசு பெரும் நிதி நெருக்கடியில் சிக்கி இருப்பது பற்றி அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவும் சுட்டிக் காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## நாவற்குழி வணிகர்கழகப் பிரதிநிதிகள் அமைச்சருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி வணிகர் கழகப் பிரதி நிதிகள் அண்மையில் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனைச்சந்தித்து, தனங்கிளப்பு, அறுகுவெளி வரை மக்களை மீளக்குடியேற்றுமாறும், யுத்தம், இடம் பெயர்வுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அமைச்சின் உதவி பெற்றுத் தரும்படியும் கேட்டுக்கொண்டனர்.

இச்சந்திப்பின்போதுஅமைச்சரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அத்துடன், புனர்வாழ்வு அமைச்சருக்கும் இதுகுறித்த கடிதம் ஒன்றும்அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (செ-238)

## இராசிபலன்

18-01-2002

(தை 5, வெள்ளி)

பஞ்சமி பி. இ 4.12 வரை
பூரட்டாதி பி. இ 1.25 வரை
ராகுகாலம்-11.05-12.35
சுபநேரம்- 6.35-8.05

**மேடம்**

முயற்சி நிறைவேறும், செல்வாக்கு, குடும்பசுகம், தெய்வதரிசனம்.

**இடபம்**

புதியதிருப்பம், அதிக பிரயாசை, தூரதேசசெய்தி, தொழில்வெற்றி.

**மிதுனம்**

பிரயாணம், உடல் உழைப்பு, வீண்பயம், காரிய தாமதம்.

**கடகம்**

எதிர்பாராத பிரச்சினை, பிரயாணக் கஷ்டம், காரிய தாமதம், வியாதி.

**சிங்கம்**

நண்பர்கள்சந்திப்பு, காரிய அனுகூலம், தொழில்விருத்தி,

## புத்தூர் பகுதியில் பாணின் தரம் குறித்து பொதுமக்கள் புகார்

(புத்தூர்)

ஆவரங்கால், சிறுப்பிட்டி, புத்தூர்ஆகிய பகுதிகளில் தரம், நிறை குறைந்த பாண் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்களால் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (செ-235)

## வலி. தென் மேற்கில் இளைஞர்சேவை மன்றங்கள் அங்குரார்ப்பணம்

(மானிப்பாய்)

வலி. தென்மேற்கு கண்டிலிப்பாய் பிரதேச செயலர்பிரிவின் 7 கிராம சேவையாளர் பிரிவுகளில் இளைஞர் சேவை மன்றங்கள அங்கு அப் பகுதி இளைஞர்சேவை மன்ற அலுவலர் செல்வி விஜயரத்தினம் வினோதினியின் துரித முயற்சியினால் அப் பகுதி இளைஞர் யுவதிகளை ஒன்று கூட்டி இம் மன்

### பாப்பரசரின் இலங்கை பிரதிநிதி

## பரிசளிப்பு விழாவில் இன்று பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

பரிசுத்த பாப்பரசர் 2ஆம் அருளப்பர் சின்னப்பரின் இலங்கைக்கான பிரதிநிதி தோமஸ் யே செங்நாண் ஆண்டகைமூன்றுநாள்ஆன்மீக விஜயத்தை மேற் கொண்டு நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

கண்டி, திருமலை-மட்டு, மன்னார் மறை மாவட்ட ஆயர்கள் சகிதம் நேற்று யாழ் வந்த ஆண்டகை இன்றைய தினம்,

காலை9.00மணிக்கு யாழ். யின் நினைவாகஇளைப்பாறிய குருக்களுக்கென புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஞாபகார்த்த இல்லத்தைத் திறந்து வைப்பார்.

தொடர்ந்து 10.45மணிக்கு புனித மடுத்தினார் குருமடத்தில் இளைப்பாறிய ஆயர்வண வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையின் குருத்துவ 60வது ஆண்டு நிறைவுத்திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்.

அன்றுமாலை, பருத்தித்துறை மறைக் கோட்டத்திற்கு விஜயம் செய்து

(மானிப்பாய்)

வலி. தென்மேற்கு கண்டி லிப்பாய் பிரதேச செயலர்பிரி வின் 7 கிராம சேவையா ளர் பிரிவுகளில் இளைஞர் சேவை மன்றங்கள அங்கு ரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டுள்ளன.

அப் பகுதி இளைஞர்சேவை மன்ற அலுவலர் செல்வி விஜயரத்தினம் வினோதினி யின் துரித முயற்சியினால் அப் பகுதி இளைஞர் யுவதி களை ஒன்று கூட்டி இம் மன் றங்கள் அமைக்கப்பட்டு வ கின்றன. (உ-120)ரு

## பாடசாலை தளபாடங்கள் விறகு வியாபாரிகள் வசம்

(தென்மராட்சி)

யுத்தத்தினால் மிகவும் போசமாகச் சேதமடைந் துள்ள நிலையில் இருக்கும் சந் திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் காணப் படும் தளபாடங்கள் விறகு வியாபாரிகளால் எடுத்துச் செல்லப்படுவது பற்றி வித்தி யாலயத்தின்அதிபர் மு.பால சுப்பிரமணியம் படைஅதிகாரி களிடம் முறைப்பாடு செய் துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, அங் கிருந்து எடுத்து வரப்பட்ட மரங்கள், தடிகளை பாதுகாப் புப் படையினர் விறகு வியா பாரிகளிடம் இருந்து பறி முதல் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-77)

### கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு

## செய்தியாளர்கள் செல்லத் தடையில்லை

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிக்கு செய்தியா ளர்கள் செல்வதற்கு விதிக்கப் பட்டிருந்த தடை நீக்கப்பட் டுள்ளதாக இலங்கை அரசாங் கம் அறிவித்துள்ளது.

வன்னிப்பகுதிக்குச் செல் லும் பத்திரிகையாளர்களுக் கான வசதிகள் செய்து கொடுக்கப்படுவதுடன், இப்ப குதிகளுக்குச் செல்லும் பத்திரி கையாளர்கள் தமது அடையா ளத்தை நிரூபிப்பதன் மூலம், 24 மணி நேரத்திற்குள் அனு மதி வழங்க ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளதாகவும் அறிவிக் கப்பட்டுள்ளது. (உ-5)

எதிர்பாராத பிரச்சினை, பிரயாணக் கஷ்டம், காரிய தாமதம், வியாதி.

**சிங்கம்**

நண்பர்கள்சந்திப்பு, காரிய அனுகூலம், தொழில்விருத்தி, தனலாபம்.

**கன்னி**

மகிழ்ச்சியான சம்பவம், தொழில்மேன்மை, முயற்சி கைகூடும், திடீர்பயணம்.

**துலாம்**

புத்திரரால் கவலை, காரிய தாமதம். இலட்சுமீகரம், ரோகம்.

**விருச்சிகம்**

முயற்சி கைகூடும், உடல் சோர்வு, அற்பர் உறவு, அரச நன்மை.

**தனுசு**

காரியநன்மை, வாக்கு மேன்மை, தனவரவு, புதிய பொருள்சேர்க்கை.

**மகரம்**

மனக்குழப்பம், மாதர் நட்பு, கௌரவக்குறைவு, காரியதாமதம்.

**கும்பம்**

பெரியோர்மதிப்பு, தெய்வ தரிசனம், கற்பனை மிகுதி, உடல்நலம்.

**மீனம்**

உணர்ச்சி வசப்படல், தந்தைவழிஉறவு, சுபசெலவு, சயனசுகக்குறைவு.

(பழைய நேரப்படி கணிப் பிடப்பட்டது.)

**வளவன்**

...சேர்ந்தார்.

கண்டி, திருமலை-மட்டு, மன்னார் மறை மாவட்ட ஆயர்கள் சகிதம் நேற்று யாழ் வந்த ஆண்டகை இன்றைய தினம்,

காலை9.00மணிக்கு யாழ். பத்திரிசியார்கல்லூரியில்நடை பெறும் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

பின்னர் மாலை 4.00 மணிக்கு பண்டத்தரிப்புபுனித சவேரியார் குருமடத்தில் குரு மடமாணவர்களுடனும் குருக் களுடனும் இணைந்து திருப் பலி ஒப்புக்கொடுப்பார்.

நாளை சனிக்கிழமைகாலை 10.00மணிக்கு யாழ்.மறை மாவட்டத்தில் உள்ள செப மாலை கன்னியர் மடத்துக்கு விஜயம் செய்வார்.

மு.ப10.15மணிக்குமறைந்த ஆயர் எமிலியானுஸ்பிள்ளை வ.தியோகுப்பிள்ளை ஆண் டகையின் குருத்துவ 60வது ஆண்டு நிறைவுத்திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்.

அன்றுமாலை, பருத்தித் துறை மறைக் கோட்டத்திற்கு விஜயம் செய்து தென்மராட் சியில் இருந்து இடம்பெயர்ந்து அங்கு வசிக்கும் மக்களைச் சந் தித்து உரையாடுவார்.

20ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை, யாழ்.மறை மாவட்டத்தில் உள்ள இளைப் பாறிய குருக்களையும் நண் பகல் 12.00மணிக்கு மறை மாவட்ட அனைத்துக் குருக்க ளையும் சந்திப்பார்.

மாலை4.30மணிக்கு யாழ். புனித மரியன்னை பேரால யத்தில் திருப்பலியும் யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் பொது வரவேற் பும் அளிக்கப்படும். (வ)

## சிந்தனைக்கு விருந்து

### உண்மையை விற்பார்

சத்தியத்தைக் காக்கவெனத் தாரத்தைப் பெற்றஅரும் புத்திரனை விற்றஅரிச் சந்திரனார் - இத்தரையில் வந்தின் றுதிப்பரேல்மாணபாருண் மைவிற்றுப் பந்தமனை மக்களைக்காப் பார்.

பந்த(ம்)மனை - பாசத்திற்குரிய மனைவி

**'பழையவன்'**



# நல்லை திருஞான ச
# கலாமண்டபத் திறப்பு

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி



நல்லை திருஞானசம்பந்தர் ஆலயத்தில் கலாமண்டபம் அமைந்திருப்பது சைவத் தமிழ் மக்களுக்கு கிடைத்த பெரும் பேறாகும். சைவத் தமிழ்ப் பணியில் நல்லை ஆதீனம் தனது அளப்பெரும் பணியை செவ்வனே ஆற்றி வருவது யாவரும் அறிந்ததே. தென்னிந்திய ஆதீனங்களில் உள்ள வசதிகளும், வளங்களும் நம் ஆதீனத்தில் இல்லா திருப்பினும் ஈழத்தில் அமைந்துள்ள ஒரே ஒரு ஆதீனம் என்ற பெருமையுடன் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் தனது பணியை இடையறாது ஆற்றி வருகின்றது.

தேவார பாராயணங்கள், புராணபடலங்கள், கருத்தரங்குகள் போன்ற நிகழ்வுகளை நடத்துவதற்கு ஆதீன மண்டபம் போதாதிருந்த போது அதற்கென கலாமண்டபம் அமையப்பெற்றது கைத்தாளம் போட்டு பரமன் புகழ் பாடிய ஞானசம்பந்தக் குழந்தைக்கு எம்பெருமான் பொற்றாளம் கொடுத்தது போல் அமைந்துள்ளது.

இவ் வகையில் இன்று திறந்து வைக்கப்படும் ஆதீன கலாமண்டபம் தன் பணியை சைவத்தமிழுக்கு ஆற்ற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் கிடைப்பதாக

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

நல்லை ஆதீனம் **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்**

## யாழ் பல்கலைக்கழக துணை வேந்தரின் வாழ்த்து



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் கலாமண்டபத் திறப்பு விழாவை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு இதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நல்லை நகரில் அமைந்துள்ள இவ்வாதீனம் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் குருப்பட்டம் பெற்ற சுவாமி நாத தம்பிரான் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. 1964ஆம் ஆண்டு அப்போதிருந்த கலாச்சார அமைச்சினால் மண்டபம் அமைக்கப்பட்டது. எனினும் குறைந்த வசதிகளுடன் விளங்கிய இவ் ஆதீனம் நற்பணிகள் பலவற்றைச் செய்து வந்தது. அவரின் பின் அதீனத்தின் பொறுப்பை ஏற்ற சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் இரண்டாவது ஆதீன முதல்வராவார். அவரின் தலைமையில் இயங்கிவரும் ஆதீனம் இன்று நவீன வசதிகளுடன் கூடிய கலா மண்டபத்தைப் பெற்றுள்ளது. அன்றைய மண்டபம் இருந்த இடத்திலேயே புதிய மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்திறகருகே சிறுவர் வகுப்பறைகளும் உள. தற்போது ஆதீனம் சமய, கலை வளர்ச்சியில் நிறைவான பணியை மேற்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சைவ சமய வளர்ச்சியில் ஆதீனங்களில் பங்களிப்பு குறிப்பிடதக்கது. இந்தியாவிலுள்ள திருவாடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், தர்மபுர ஆதீனம் போன்ற பல ஆதீனங்கள் நிறைந்த வளங்களுடன் பணியாற்றி வருகின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள திருஞானசம்பந்தர் ஆதீனம், மெய்கண்டார் ஆதீனம் போன்றன நிலவளம், பொருள்வளம் அற்றநிலையில் பணியாற்றுகின்றன. எனவே வருங்காலத்தில் ஆதீனங்கள் வளர்க்கப்படவேண்டும். நிறைந்த வள்ங்களுடன் வளர்ச்சியடையும் ஆதீனங்கள் சைவ, தமிழ், கலை, கலாச்சாரங்களை வளர்த்தெடுப்பதில் சிறந்த பணியாற்ற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

நல்லை ஆதீனம் முதல்வர் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் இயங்கும் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பணி மேலும் சிறக்கவும் குருமூர்த்த ஆலயம் சுவாமிகளின் இருப்பிடவசதி கட்டுமானப்பணிகள் நிறைவேற இறைவன் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.


**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**

மலரமைப்பு:- ரஞ்சித்

## நல்லை ஆதீனத்

ஈழவள நாட்டின் வடபால் தமிழ் மன்னன் செங்கோலோச்சிய நல்லையம்பதியில் கடையிற் சுவாமிகள், செல்லப்பச் சுவாமிகள், யோகர் சுவாமிகள், சடை அம்மாச் சுவாமிகள் பாதம்பட்டுப் புகழடைந்தும் அலங்காரக் கந்தனின் அருளாட்சி பெற்றும் விளங்கும் பூமியில் அழகுறு ஆத்மீக நிலையமாய் அமைந்த ஆதீனம் சிறப்புறு பணியால் சீர்பெற்று வனப்புறுவகையில் வடிவமைக்கப்பட்டு மக்கள் பணிக்கென திறக்கப்படுவதையிட்டு உலகெலாம் வாழும் இந்துக்கள் உவப் படைகின்றனர்.இதே வேளை வடமாநில இந்துமாமன் றமும் காலமெலாம் சேவையாற்றி சிறப்புற வாழ்த்துகின்றது.

ஞானகுருவின் அருட்பார்வையினாலும் ஆன்மநேய ஈர்ப்பினாலும் மனதை ஒரு நிலைப்படுத்தி போதனைகளை சாதனைகளாக்கி அருள் நெறி வழிப்படுத்தும் அன்புறை இடம் ஆதீனமாகும் இவ் வகையில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனமும் " ஞால நின் புகழே மிக வேண்டுந்தென் ஆலவாயிலுறையுமெம் மாதியே" என்ற ஞானசம்பந்தரது வாக்கினை வாசகமாகக் கொண்டு இன்றைக்கு நாற்பது வருடங்களுக்கு மேலாக இறைபுகழும், அருளும் என்றும் நிலைத்து நிற்கும் வகையில் சேவையாற்றி வருகின்றது. " மேன்மை கொள்சைவ நீதி விளங்குக உலகெலாம" என்ற திருவருட் குறிப்போடு சேவையாற்றி வரும் மதுரை ஞான சம்பந்தர் ஆதீன 291வது குருமகா சந்நிதானம் திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாச்சரிய சுவாமிகள் நல்லை ஆதீன குருமாக சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாச்சரிய சுவாமிகளுக்கு 1966ஆம் ஆண்டு ஆடிமாத கார்த்திகை நட்சத்திரத்தில் குருமகா சந்நிதானமாக பட்டமளித்து தீட்சை வழங்கினார். இவரே இவ் ஆதீன முதலாவது குருமாக சந்நிதானம் ஆவார்.



நல்லை ஆதீன கலாமண்டபத்தி

## நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தின்

1. சமயதீட்சை:

மாணவ மாணவிகளுக்கு, பெரியோர்களுக்கு, ஆதீனத்தில் இலவசமாகச் சமயதீட்சை வழங்கப்படும். விசேடமாக நல்லைக்கந்தன் மகோற்சவ காலங்களிலும், ஸ்கந்தசஷ்டி, ஐப்பசி செள்ளி போன்ற விசேட காலங்களிலும் ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளும், இளவரசு சுவாமிகளும் சமயதீட்சையை வழங்குவார்கள். இளவரசு சுவாமிகளும் சமயதீட்சையை வழங்குவார்கள். நாட்டின் எந்தப் பகுதியிலும் உள்ள சைவ ஸ்தாபனங்கள், பாடசாலைகள், மேற்படி தீட்சையை அவ்வவ்விடங்களில் நடாத்த வேண்டுமென விரும்பினால், ஆதீனச் சார்பில், வேதாரண்ய சைவக்குருமார்கள், அதை நடாத்தி வைப்பார்கள், அவர்களுக்குரிய செலவு பெறப்படும். இதற்குரிய விபரங்களை ஆதீன இளவரசு சுவாமிகளிடம் அறிந்து கொள்லாம். அல்லது ஆதீன சமயப்பணிப் பொறுப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

2. சைவக் கிரியைகள்:

திருமண வைபவங்ளுக்கான கிரியைகள், மற்றும் இயற்கையெய்தியமைக்கான கிரியைகள் ஆகியவற்றுக்கு வேண்டிய குருமார்களை ஏற்படுத்திக் கொடுத்துக் கிரியைகளை நடாத்த உதவுவதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

3. திருமறை - திருமுறை

வேதம், திருமுறைகளை நிலையாக இருந்து கட்டுப்பாட்டுடன் பயில மாணவர்களுக்கு (குருகுல முறைப்படி) உணவு, உடை, உறையுள் தந்து ஆதரித்துப் போதிக்கப்படும். இதற்குரிய தகுதி உள்ளவர்கள் ஆதீன உள்துறை ஆலோசனைக் குழுவினாற், பரிசீலனை செய்ப்பட்ட பின்பே ஏற்றுக்கொள்ப்படுவர்.

4. சமயப் பிரசாரம்:

சமயம் பரப்புநராகவும், இன்னிசை விரிவுரையாளராகவும், ஆண், பெண் ஆகிய இரு பாலருக்கும் மூன்று பிரிவுகளாக ஆதீனப் பாடத்திட்டத்திறகமையப் பயிற்சியளிக்கப்படும். இரண்டு ஆண்டுத்திட்டமாக வகுக்கப்பட்டு அதில் தகுதி பெறுவோருக்கு சைவப்பிரசங்கத் தகைமைச் சான்றிதழ் ஸ்ரீலஸ்ரீ ஸ்சுவாமிகளின் பீடாரோகண விழாவன்று வழங்கப்படும். இதில் பயிற்சிபெற விரும்புபவர்கள் சமயதீட்சை பெற்றவர்களாகவும் அல்லது உடன் பெறக்கூடியவர்களாகவும், சைவபோசனம் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். வாரத்தில் நான்கு நாட்கள் வகுப்புக்கள் மாலை 5 மணிமுதல் 6.30 மணிவரை நடைபெறும். ஆதீனத்தில் தங்கிப் பயில விரும்புவர்கள் இளவரசு ஸ்வாமிகளுடன் தொடர்பு கொள்ளவும்

விழாக்களும் பிரசாரமும்:

எந்த தேவஸ்தானமாவது தமது ஆலய விழாக்களில், சமய சொற்பணிகளையோ, இன்னிசை விரிவுரைகளையோ, பண்ணிசைக் கச்சேரிகளையோ, பக்திப்பாடல் நிகழ்ச்சிகளையோ நடாத்த விரும்பினால் சில விதிமுறைகளுக்கமைய ஆதீன விரிவுரையாளர்களைக் கொண்டும், ஆதீன பன்னிரு திருமுறைப் பண்ணிசை மாம அவை நடாத்திக் கொடுக்கப்படும்.

5. ஆதீனச் சமயச் சொற்பணி:

மாதம் ஒரு முறை ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் தோறும் சென்று பண்ணிலை, சமயச் சொற ஆலயங்களில் நடைபெறும், உற்சவங்களில் ஆகியவற்றுடன் நடாத்தப்படும். ஒலி, ஒளி, அமைப்பாளர்கள் ஒழுங்கு செய்து கொடுக் விபரங்களை சமயப்பணிப் பொறுப்பாளரிடம்

6. திருமுறைப் பண்ணிசை:

மாணவ, மாணவிகள், பெரியோ திருமுறைகளை ஓத வாரத்தில் இரண்டு நாட் பட்டப் பாடத்திட்டத்திறகமைய வகுப்புக்கள் திருமுறைப் பண்ணிசை மாமன்றம் விசேடமா விழாக்களில் சென்று திருமுறை ஓதி வரு ாலை 5.30 மணி முதல் மன்றத்தினர் பன்னி

7. உபநயனம்:

பணவசதியற்ற ஏழை அந்தணச் சிறார் முறை உபநயனம், (இலவசம்) ஆதினக்கண செய்யப்படும். ஆதீனப் பிரதம சிவாச்சார்யருட கொள்ளலாம்.

8. ஞான பரம்பரை:

ஆதீனத்தில் ஞானப் பரம்பரையின் ஒருவர மாணவன் ஆதீனத்தின் கட்டுப்பாட்டுக்கு அ பத்திரத்தில் கைச்சாத்திட்டபின் ஆதீன உ குழுவின் அங்கீகாரத்தின் பின்னர் ஏற்றுக்

9. மகாநாடுகள்:

திருநெறிப் தெய்வீக மாகநாடு, ஆவணி விரிவுரைகள் மணிவாசகர் விழா பத்து நா ஆகியவை சிறப்பாகக் கொ தகுதியுடையவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளா செய்யப்படும்.

10. யாத்திரிகர்கள்:

வெளியூரில் இருந்து வரும் யாத்திரிகர் செய்து கொடுக்கப்படும். செயலாளரிடம் இ

11. இந்துசமய வகுப்புகள்:

சித்திரை, ஆவணி, மார்கழி மாதத்தில் வ நாள்களுக்கு இந்து சமயப் பயிற்சி வகு ஆதரவுடன் நடைபெறும். தவறாது பங்குப மாதப் பீடாரோகண விழாவிற் சான்றிதழ்க


**சித்ராலயா**
172, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 2286

**பிள்ளையார் அச்சகம் (pvt) ltd**
676, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

**பூங்கனிச்சோலை**
முடமாவடி, திருநெல்வேலி.

**ஸ்ரீ சங்கீதன் வெதுப்பகம்**
நல்லூர், யாழ்ப்பாணம்.

**அஜந்தா ஸ்**
சங்கிலியன் வீதி,

# ...ன சம்பந்தர் ஆதீனம் ...ப்பு விழா சிறப்பு மலர்



## ...னத்தின் வரலாறு



...ண்டபத்தின் முகப்புத் தோற்றம்

இவர் நல்லைக் குருமணியாக விளங்கி 1966இல் ஆவணிமாத கார்த்திகை நட்சத்திரத்தில் கோயில் வீதியில் உள்ள தனியார் வீடொன்றில் ஆதீனத்தை நிறுவினார் பின்பு 1972இல் நல்லூர் மேற்கு வீதியில் புத்தூர் மழவராயர் நம்பிக்கை நிதியத்திடம் இருந்து வழங்கப்பட்ட காணியின் ஆதீனம் மாற்றப்பட்டு சிறப்புற பணியாற்றத் தொடங்கியது. தற்போதைய குருமகா சந்நிதானத்திற்கு 1977 இல் இளவரசு பட்டமளித்து ஆதீனப்பணிகளை முன்னெடுத்தது அற்புதமானது. நல்லைக் கந்தன் வீதியில் பிரசங்கம் செய்த குருமணியின் குரல் இன்னும் ஒலிக்கின்றது. அடியவர் உள்ளத்தில் அத்தகைய குருமணி 1981ஆம் ஆண்டு பங்குனித் திருவாதிரையில் சமாதி அடைந்தார். இவரது சமாதி ஆலயம் இன்றும் ஆதீன வளவில் உள்ளது. சிவலிங்கமாக அவரது அருளாட்சி கிடைக்கிறது.

பின் குருமணியின் சமாதியடைந்த பன்னிரண்டாம் நாளில் தற்போதைய குருமாக சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இரண்டாவது குருமகா சந்நிதானமாக அமர்ந்தார். நல்லை ஆதீனமானது காலத்தின் தேவையை அறிந்தது. அஞ்ஞான இருளுடன் துன்ப இருளையும் நீக்கி இன்ப ஒலியை ஊட்ட வேண்டும். இந்த ஆதீனம் வேதநெறி தளைத் தோங்கவும் மிகு சைவத்துறை விளங்கவும் தென்னிந்தியாவில் ஆதீனங்கள் ஆற்றும் தமிழ், சைவ சமூகப் பணிகளை ஆற்ற வேண்டியது காலத்தின் தேவையாகும்.

எனவே பல இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்ட இவ்வாதீனமண்டபம் அறப்பணி களாற்றவும் சைவத்தையும் கலைகளையும், தமிழையும் வளர்க்கவும் பயன்பட்டு சமூகமும் நாடும் நன்நிலை அடைய வேண்டி வாழ்த்துகின்றோம்.

" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

**வடமாநிலம் இந்துமாமன்றம்,**

## ...த்தின் இருபது அம்சச் செயற் திட்டம்

...ப் பண்ணிசை மாமன்றத்தினரைக் கொண்டும், ...க்கப்படும்.
...ற்பணி:
...ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் தலைமையில் இடங்கள் ...லை, சமயச் சொற்பணி கூட்டுப்பிரார்த்தனை ...ம், உற்சவங்களில் வர்ணத் திரைப்படக் காட்சி ...படும். ஒலி, ஒளி, வசதிகள் அவ்விடங்களில் ...கு செய்து கொடுக்க வேண்டும். இதற்கான ...ப் பொறுப்பாளரிடம் தெரிந்து கொள்ளலாம்.
...சை:
...விகள், பெரியோர்கள் பண்ணமைவுடன் ...த்தில் இரண்டு நாட்கள் பண்ணிசை மாமணிப் ...மைய வகுப்புக்கள் நடாத்துதல், இப்பன்னிரு ...மாமன்றம் விசேடமான ஸ்தலங்களில் சிறப்பான ...ருமுறை ஓதி வருதல், ஆதினத்தில் தினம் ...மன்றத்தினர் பன்னிரு திருமுறை ஓதி வருவர்.

...ழ அந்தணச் சிறார்களுக்கு வருடத்தில் ஒரு ...வசம்) ஆதினக்கணக்கில் நடாத்த வழிவகை ...தம சிவாச்சார்யருடன் விபரங்களுக்கு தொடர்பு

...ரம்பரையின் ஒருவராகப் பயிற்சி பெறவிரும்பும் ...ட்டுப்பாட்டுக்கு அமைந்து நடக்கவும். அற்குரிய ...ட்டபின் ஆதீன உள்துறை ஆலோசனைக் ... பின்னர் ஏற்றுக்கொள்ளப்படுவார்.

...மாகநாடு, ஆவணி மகோற்சவம், ஸ்கந்தஷ்டி ...ர் விழா பத்து நாள், மகாசிவராத்திரி விழா, ... கொ...டாடப்படும். சிவராத்திரியன்று ...ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளால் சிவபூஜை எழுந்தருளச்

...வரும் யாத்திரிகர்களுக்கு உறை விட வசதி ... செயலாளரிடம் இது பற்றியறியலாம்.
...ள்:
...ர்கழி மாதத்தில் வரும் விடுமுறைக் காலத்தில் ...சமயப் பயிற்சி வகுப்பு, கல்வித் திணைக்கள ... தவறாது பங்குபங்பற்றுவோருக்கு ஆவணி ...விற் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

12. பாத யாத்திரை

ஆதீன இளவரசு ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் ஸ்வாமிகள் தலைமையில் மாவிட்டபுரம் செல்வச் சந்நிதி, திருக்கேதீச்சரம் ஆகிய ஸ்தலங்கட்கு வருடம் தோறும் பாதயாத்திரை நடைபெறும்.

13. மார்கழி - தென் இந்தியா யாத்திரை:

வருடத்தில் ஒருமுறை மார்கழி மாத காலத்தில் தமிழகத்தில் சமயகுரவர்களால் தேவாரம் அருளப்பெற்ற சிவ ஸ்தலங்களுக்கும் முருக ஸ்தலங்கட்கும் யாத்திரை ஒழுங்கு செய்யப்படும். விபரம் கல்வி, கலை, கலாச்சார சமயப்பணி பொறுப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

14. கலாமண்டப உபயோகம்:

சமய நிகழ்ச்சிகள், இசை விழாக்கள் மன்றங்களில் சமய நூல் வெளியீட்டு விழாக்கள் திருமண வைபவங்கள் ஆகியவற்றிற்கு ஆதீனகலா மண்டபம் கொடுக்கப்படும். விபரம் ஆதீன இளவரசிடமோ, கல்வி, கலை கலாச்சார சமயப்பணிப் பொறுப்பாளரிடமோ தொடர்புகொண்டு பெறலாம்.

15. அன்னதானம்:

அன்னதானம் செய்ய விரும்பும் தொண்டர்கட்கு வேண்டிய அனுசரணைகள் (பாத்திரம் இடவசதி) ஆதீனத்தால் செய்து கொடுக்கப்படும்.

16. நல்லுதவிகள்:

ஆதீனத்திற்கு நன்கொடைகள், ஓவியங்கள், தம் எழுத்துப் படைப்புகளை உதவுவோர் இளவரசு சுவாமிகளிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

17. சைவ சித்தாந்த வகுப்பு:

ஆதீனத்தில் சனி, ஞாயிறு காலை இவ்வகுப்பு ஈழத்துச் சித்தாந்த சைவ வித்தியாபீடத்தால் நடாத்தப்படுகிறது. அங்கத்துவம் பெற விரும்புவோர் ஆதீனத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

18. நாயன்மார் குருபூசை:

தேவார முதலிகட்கும், திருவாதவூரர்க்கும் மட்டுமே குருபூசை நிகழ்ந்து வருகிறது. உபயகாரர்க்கு, மற்றைய நாயன்மார்க்கும் குருபூசை செய்ய வசதி செய்து கொடுக்கப்படும்.

19. வாழ்வு மறுமலர்ச்சிக் கழகம்:

ஆதரவு அற்ற, வாழ்வில் விரக்தியுற்ற, கன்னியர்க்கும் கணவனை இழந்த கற்புடைய மாதர்க்கும் ஆதீனம் இக்கழத்தை அமைக்க எண்ணியுள்ளது. இதனைப் பராமரிக்க பட்டதாரி ஆசிரியையொருவர் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். ஆதீனத்தில் புறம்பான கட்டுப்பாட்டுடன் அமைந்த உறைவிடம் வழங்கப்படும்.

20. ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் - நேர்முகச் சந்திப்பு:

சுவாமிகளைச் சந்திப்பதற்கு ஆதின இளவரசு ஸ்வாமிகளின் உத்தரவுபெறல் சாலவும் விரும்பத்தக்கது.

## சர்வதேச இந்துமத குரு பீடதிபதியின் ஆசிகள்



எமது நாட்டிலே தமிழும் சைவமும் என்றும் நிலைத்திருக்கவேண்டும் என்ற நோக்குடன் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக பிரம்மஸ்ரீ சி.எஸ் மணிபாகவதர் (முதலாவது நல்லைக் குருமணி) அவர்களால் நற்சிந்தனையுடனும், நல்லெண்ணத்துடனும், நல்மனத்துடனும் ஆரம்பிக்கப்பட்டு இன்று ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி எமது மக்களின் மத்தியிலே இன்று நடைபெறுகின்ற கலாமண்டப திறப்பு விழா சைவஉலகத்திற்கு சிகரம் வைத்தது போல் விளங்குகின்றது. முதலாவது குருமணியின் சேவைக்குப் பின் இரண்டாவது மஹாசந்நிதானமாகிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தனது சேவையை சைவ உலகத்திற்கு ஆற்றி வருவது மிகவும் போற்றுதற்குரியது. இவருடைய காலத்திலே இம்மண்டபம் அமைத்து சிறப்புற திகழ்வது நகரத்தையே அலங்கரிக்கின்றது. மேலும் இவருடைய சேவைகள் சைவ உலகத்திற்கு கிடைக்க வேண்டுமென வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

**இந்துமதகுரு பீடாதிபதி - சிவஸ்ரீ ஐ. மகேஸ்வரக்குருக்கள்.**

## துர்க்கா துரந்தரியின் வாழ்த்துரை



எமது ஈழத் திருநாட்டிலே ஒரே ஒரு சைவ ஆதினமாக விளங்குவது நல்லை திருஞான சம்பந்தர் ஆதினாம் ஆகும். இதனைத் தோற்றுவித்தவர் நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத் தம்பிரான் ஆவர். நல்லைக் கந்தனின் மேற்கு வீதி ஓரமாக அமைதியான ஓர் இல்லத்தில் இவ் ஆதினம் ஆரம்பிக்கப்பட்டது. குருமணி அவர்களின் மறைவின் பின்பு அன்னாரின் ஞாபகமாக சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டு கோயில் ஒன்றும் அமைக்கப்பட்டது. அன்பர்களும், ஆதரவாளர்களும், வர்த்தகப் பெருமக்களும் ஒன்று சேர்ந்து இவ் ஆலயத்தின் இரண்டாவது குருமகா சன்னிதானமாக எழுந்தருளி உள்ள ஞான சம்பந்த பாரமாசாரிய சுவாமிகளுக்கு ஆதரவாக விளங்கினர். குருபூசைகள், புராணபடனங்கள், சிறுவர் பாலர்பாடசாலைகள் இவ் ஆதினத்தின் ஆதரவில் நடைபெற்றன. நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு கட்டட வசதிகள் போதமையைக் கருத்திற் கொண்டு இன்று அரசஅதிபரின் அனுசரனையின் பெயரில் பெரியதொரு கலாச்சார மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. பல இலட்சம் ரூபா செலவில் சமிபத்தில் இத் திருப்பணி நிறைவேறியதை சைவ உலகம் நன்கு அறியும். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமைதாங்கி திறப்பு விழா வைபவத்தை இன்று நடத்தவுள்ளார். இவ் விழாவை முன்னிட்டு நாமும் எமது வாழ்த்துக்களை வழங்கி மகிழ்ச்சியடைகின்றோம்.

தலைவர்
ஸ்ரீ துர்க்கா தேவி
தேவஸ்தானம்,
தெல்லிப்பழை

கலாநிதி. செல்வி.
தங்கம்மாஅப்பாக்குட்டி,

## மாநகர ஆணையாளரின் வாழ்த்து



கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள் மற்றும் யோகர் சுவாமிகள் போன்ற சித்தர்கள் பலர் உலாவிய நல்லைக் கந்தனின் ஆலயச் சூழலில் அமைந்துள்ள நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் கலாமண்டபம் ஒன்று திறந்து வைக்கப்படவிருப்பது சைவத் தமிழ் உலகத்திற்குக் கிடைத்த பெரும் பேறு என்றே துணிந்து கூறலாம்.

அந்நியர் எமது நாட்டில் ஆதிக்கம் செலுத்தியபோது ஆதியும் அந்தமும் இல்லாத எமது சைவசமயம் பெரும் அச்சுறுத்தலையும் ஆபத்தையும் எதிர்நோக்கிய வேளையில் சைவத்தின் காவலனாக உதித்த நாவலன் தனியொருவனாக நின்று ஆற்றிய அரும்பெரும் பணிகளினால் சைவம் தப்பிப் பிழைத்தது.

போராட்ட சூழல், இடப்பெயர்வுகள் மற்றும் குடும்பத்தில் தலைவிரித்தாடும் வறுமைநிலை போன்றவற்றால் மக்கள் பலரும் உளரீதியாக நலிவுடைந்திருக்கும்போது நிர்ப்பந்தத்தின் காரணமாக மதமாற்றம் பெருகிவரும் இவ்வேளையில் அதனைத் தடுத்து நிறுத்தும் நோக்கோடு நல்லை அதீனம் அரும்பணிகள் பலவற்றை முன்னெடுப்பதற்கு இன்று திறந்து வைக்கப்படும் கலாமண்டபம் கைகொடுக்கும் என நம்புகின்றேன்.

நல்லை ஆதீனத்தின் பணிகள் காலத்தின் தேவைக்கேற்றவாறு சிறப்புற்றோங்கி சைவமும் தமிழும் உன்னத நிலையை எய்த எல்லாம் வல்லநல்லைக்கந்தன் அருள் பாலிக்க வேண்டுமென அவன் தாள்பணிந்து உளமார வாழ்த்துகின்றேன்.

தலைவர்,
சைவசமய விவகாரக்குழு.
மாநகராட்சி மன்றம்.
யாழ்ப்பாணம்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,

...ர் ஸ்ரூடியோ
...ன் வீதி, நல்லூர்.

மெடி எயிட்ஸ்
பருத்தித்துறை வீதி, நல்லூர்.

யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமி
அம்மன் வீதி, நல்லூர்.

உள்ளூராட்சி சபைகளில்

# பொ. ஐ. மு. ஆட்சியில் நிகழ்ந்த ஊழல்களை விசாரிக்க முடிவு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் மாகாண சபைகள் உள்ளூராட்சி நிறுவனங்கள் என்பவற்றில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் மோசடிகள், முறைகேடுகள், நிர்வாக சிக்கல்கள் என்பன தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக உள் நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

கேள்விப்பத்திர நடைமுறைகளுக்கு எதிராக முரணான வழிகளில் ஒப்பந்தங்களையும் கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக் கொடுத்தமை.

தகைமை இல்லாதவர்களுக்கு பதவி உயர்வுகொடுத்தமை ஆகியன தொடர்பாக நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயங்கள் தொடர்பாக அனைத்து விபரங்களும் சேகரிக்கப்பட்டு ஊழல் புரிந்தோருக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டுகுறைகள் பூர்த்தி செய்யப்படும்எனவும் தெரிவித்துள்ளார்.

இவ்விடயங்கள் தொடர்பாக தகவல்களை வெளியிட விரும்பும் மக்கள் அனைவரும் இல 330, யூனியன் ஸ்ரீற், கொழும்பு 02 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கு மாறும் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். (உ-8)

# மட்டு வாவியில் இழுவை வலை பயன்படுத்த தடை

மீறின் சட்டநடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாவியில் இழுவை வலையை பயன்படுத்தி மீன்பிடிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட இழுவை வலைகளைப் பயன்படுத்தி வாவியில் மீன் பிடிப்பதால் சிறிய மீன் முதல் பெரிய அளவிலான மீன்கள் அனைத்தும் அழிந்து போகும் நிலை தோன்றியுள்ளதாக நீர்வள ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்தே இழுவை வலையைப் பயன்படுத்துபவர்களைப் பாதுகாப்பு படையின் உதவியுடன் கைது செய்துநீதி மன்றில் நிறுத்தி தண்டனை வழங்க வேண்டுமென்று நீரியல் வளத் திணைக்களம் அறிவித்துள்ளது. (உ-7)

அகதி மக்களின் அவலம் குறித்து

# ஐ.நா. அமைப்புக்கு தெரியப்படுத்தவில்லையாம்

(தென்மராட்சி)

கரவெட்டிப் பகுதியில் இயங்கிவரும் தென்மராட்சி மக்கள் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்தோர் நலன்புரிநிலையங்களில் நிலவுகின்ற குடியிருப்புப் பிரச்சினைகள் தொடர்பாக இதுவரை எந்தவொரு அதிகாரியும் தமது கவனத்துக்குத் தெரியப் படுத்தவில்லை என அகதிகளுக்கான ஐ.நா. அமைப்பின் அதிகாரி ஒருவர் குடியிருப்பாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பெய்திருந்த கடும் மழையினால் அங்குள்ள குடியிருப்புக்களில் சேறும் சகதியும் காணப்படுவதுதொடர்பாக தென்மராட்சி மக்கள் செய்திருந்த முறைப்பாட்டினைத் தொடர்ந்தே ஐ.நா. அமைப்பின் அதிகாரி அங்கு சென்றிருந்தவேளை இவ்வாறு தெரிவித்துள்ளார். (உ-77)

உரிமைகளை உறுதிப்படுத்த

# பொலிஸ் நிலையங்களுக்கு அருகில் மகளிர், சிறுவர் பணியகங்கள்

யாழ்.மாவட்டத்திலும் அமைப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் 100நாள் அபிவிருத்தித்திட்டத்தின்கீழ்நாடளாவிய ரீதியில் பொலிஸ் நிலையங்களுக்கு அருகில் மகளிர், சிறுவர் பணியகங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் எச். எம். வி. பி கொட்டதெனிய தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நாட்டில் தொகுதிவாரியாக இதுவரை 34 பணியகங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், யாழ்.மாவட்டத்திலும் ஒரு பணியகம் அமைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது பெண்களுக்கும், சிறுவர்களுக்கும்எதிராக கட்டவிழ்த்துவிடப்படும் துஷ்பிரயோகங்கள், பாலியல் குற்றங்கள், அடிமைத்தனங்கள் என்பவற்றினை தடுக்கும் முகமாகவே இப்பணியகங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

# தமிழ் ஊடகவியலாளர்கள் புறக்கணிக்கப்படுவது பற்றி பிரதமருக்கு டக்ளஸ் கடிதம்

படையினரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பிரதேசங்களுக்குச் செல்வதற்கு, தமிழ் ஊடகவியலாளர்களுக்கு மட்டும் அரசாங்கம் அனுமதி மறுத்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது ஊடக சுதந்திரம், மற்றும் ஜனநாயக உரிமைகள் என்பவற்றுக்கு புறம்பானதாகும்.எனவே இதனை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இவ்வாறு ஈழமக்கள்ஜனநாயகக்கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ்ப்பாண மாவட்டபாராளுமன்ற உறுப்பினருமான கே. என். டக்ளஸ் தேவானந்தா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இக்கடிதத்தில்அவர்மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சகோதர மொழிப் பத்திரிகையாளர்கள் மற்றும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்குபடையினரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பிரதேசங்களுக்கு செல்ல அனுமதி... ரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டபகுதிகளில் வாழும் மக்களின் உண்மையான எண்ணங்களும். தேவைகளும் வெளிப்படுத்தப்படுமெனவும் சமாதான சகவாழ்வின்மேல் மக்களுக்குள்ள பற்றுறுதியை வெளிப்படுத்தும் வாய்ப்பாகவும் இது அமையுமெனக் கருதுகின்றோம்.

எனினும் ஏனைய பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் இந்த வாய்ப்பு தமிழ் ஊடகவியலாளருக்கு மட்டும் மறுக்கப்பட்டது ஏன் என்பது புரியாத புதிராகும்.

இதேபோலவே யாழ்ப்பாணத்திற்கு முதற்தடவைவிஜயம் மேற்கொண்ட அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவின் குழுவிலும் தமிழ் ஊடகவியலாளர்கள்மட்டும் புறக்கணிக்கப்பட்டு இருக்கின்றனர். இதனால் தமிழ் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பது திட்டமிட்டவகையில்தடுக்கப்படுகிறதோ என்ற சந்தேகத்தையும் இது தோற்றுவிக்கின்றது.

சிறைகளில் வாடும் தமிழ்

# இளைஞர்களின் நிலை தொடர்பாக பாதுகாப்பு அமைச்சரிடம் பேச்சு

(கொழும்பு)

வருடக்கணக்கில் சிறைகளில் வாடும் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களை விடுதலை செய்ய பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன நடவடிக்கை எடுக்க வேண்டுமென மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் கோரியுள்ளார்.

அண்மையில் பாதுகாப்பு அமைச்சரைச் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தியபோதே சந்திரசேகரன் இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

தடுத்துவைக்கப்பட்டுள்ளநூற்றுக்கணக்கான இளைஞர்களின் வாக்குமூலங்களைஅடிப்படையாக வைத்து அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பல இளைஞர்கள் மீதுவழக்குத் தொடரப்படாது அவர்கள் மீது எந்த விதமான குற்றச் சாட்டும் சுமத்தப்படாத நிலையில் 4,5வருடங்களுக்கு மேலாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்குக் காரணம் இவர்கள் மீதான குற்றத்தை நிரூபிப்பதற்கு போதுமான ஆதாரமின்மையே ஆகும்.

இதேவேளைவிசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ள சில வழக்குகள் கூட அடுத்த தவணைக்கான திகதிகுறிப்பிடப்படாது சந்தேக நபர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறானவர்களைபிணையிலாவது விடுதலை செய்வதற்கு சட்டமாதிபர் திணைக்களம் ...

யிலாவது விடுதலை செய்வதற்கு சட்டமாதிபர் திணைக்களமும் பாதுகாப்பு அமைச்சும் கருத்தொருமித்து செயற்பட முன்வரவேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார். (உ-5)

களுக்குபடையினரின் கூட்டுப் பாட்டுக்கு அப்பாற்பட்ட பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று மக்களைச் சந்திக்கவும் செய்தி சேகரிக்கவும்வசதி செய்யப்பட்டுள்ளமையை வரவேற்கின்றோம்.

இதன் மூலமாக படையின

தையும் இது தோற்றுவிக்கின்றது.

எனவே இது தொடர்பில் நேரடிக் கவனம் செலுத்தி தமிழ் ஊடகவியலாளர்களின் மனக் குறையை போக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# சந்தே முழக்கு

## முதியோருக்கு வசதியில்லை

60வயதிற்கு மேற்பட்ட முதியோருக்கு வைத்திய சாலைகளில் மருத்துவ சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சமூக சேவைகள் அமைச்சினால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் 60வயதிற்கு மேற்பட்ட முதியோருக்காக ஒரு பிரிவு இயங்குகிறது. சுகாதார சேவைகள் அமைச்சினாலும் சகல வைத்திய சாலைகளுக்கும் மேற்கூறிய விடயம் சம்பந்தமாக சுற்றுநிருபங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இருந்தும் சங்கானை கிராமிய வைத்தியசாலையில் இது கடைப்பிடிக்கப்படுவது இல்லை. சங்கானை வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் ''முதியோருக்கு'' என விளம்பரத்துடன் இருக்கைகள் போடப்பட்டு உள்ளன. ஆனால் அங்கு கடமையில் இருக்கும் சிற்றூழியர்கள் 60வயதிற்கு மேற்பட்ட முதியோர்களை அந்த இருக்கைகளில் இருக்க அனுமதிப்பதில்லை. சாதாரண மக்களைப் போல வரிசையில் வருமாறு பணிக்கிறார்கள். அப்படியானால் இதன் நோக்கம் என்ன என முதியோர்கள் பேசிக்கொள்கிறார்கள். ஆகவே உரியஅதிகாரிகள் இதைக் கவனிப்பார்களா?

இ. நடராசா
சுழிபுரம்

குருநாகல்பகுதி

# அரசியல்வாதியின் வீட்டில் இருந்து துப்பாக்கிகள், குண்டுகள் மீட்பு

(கொழும்பு)

குருநாகல் மாவத்தகம பகுதியில் அரசியல்வாதி ஒருவரின் வீட்டிலிருந்து நேற்று முன்தினம் விமானப் படையினரின் சீருடைகள் ஏ. கே. 47 ரக துப்பாக்கிகள் மற்றும் 3 குண்டுகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

சட்டவிரோத ஆயுதங்களை பொலிஸ்நிலையம் மற்றும் பிரதேச செயலகங்களில் ஒப்படைப்பதற்கான பொதுமன்னிப்புக்காலம் கடந்த 14 ஆம் திகதியுடன் முடிவடைந்ததையடுத்து;

சட்டவிரோத ஆயுதங்களைத் தேடிக்கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போதே மேற்படி அரசியல் வாதியின் வீட்டிலிருந்து இந்த ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (உ-5)

காலாவதியான பொருட்கள் விற்ற

# கடை உரிமையாளர்கள் மீது வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மற்றும் நல்லூர், திருநெல்வேலி பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் நேற்று முன்தினம் பொதுச் சுகாதாரப் பிரிவினர் திடீர் பரிசோதனைகளை நடத்தினர்.

இதன் போது, கோண்டாவில் பகுதியிலுள்ள 3 கடைகளிலும், நல்லூர் பகுதியிலுள்ள 2 கடைகளிலும் காலாவதியான பிஸ்கட் மற்றும் பால்மா வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும்,

சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் பொது சுகாதாரப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-4)

## பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி

# மேதகு தோமஸ்யே செங் நாண் யாழ். வருகை

அருள்திரு
**ரூபன் மரியாம்பிள்ளை**

யாழ். வரும் பாப்பரசரின் பிரதிநிதி மேதகு தோமஸ்யே செங் நாண் ஆண்டகையே வருக! வருக!! எம்மண்ணிற்கு வருக! நீண்டகாலப் போரின் அவலங்கள் போக்க வருக! தங்கள் முதல் வரவு நல்வரவாகுக.

தொண்ணூற்றொன் பதில் இலங்கையில் பணியினை ஏற்றதும் யாழ். நகர் வாழ் தமிழ் மக்கள் மட்டில் ஆழ்ந்த அனுதாபமும் அன்பும் கொண்டீர். பணியின் வரையறைகள் யாழ். மண்ணை தரிசிக்க அனுமதிக்காத போதும் எம் மண்ணின் கதைகளை எம் ஆயரிடம் மணிக்கணக்காய் கேட்டறிந்தீர். உண்மைநிலையினை அறிந்து மனம் நெகிழ்ந்து போனீர் யாழ்ப்பாணம் வர காலமொன்று கனியுமென காத்திருந்தீர். சமாதான மொட்டு ஒன்று விரிந்தது கண்டு-கனிந்த காலம் இதுவென பறந்து வந்தீர். நீவீர் வந்த நேரம் நல்ல நேரம். பேச்சுக்களின் பேச்சும் சமாதானத்தின் சமிக்ஞைகளும் அமைதியின் ஆரம்பமும் என்றுமில்லாதவாறு எம்மை அண்மித்தவேளை நேரம் சற்றும் பொறுக்காதுசமாதானப் புறாவாய் பறந்து வந்தீர். நீர் வந்த நேரம் நல்ல நேரம். ஒழுக்கமும் உண்மையும் தளைத்திட வழுவா வரம் கொண்டு உழைத்திடும் பரமனின் பிரதிநிதியாம் பாப்புவை போரில் நொந்து நொறுங்கிய நெஞ்சங்களுக்கு மிக நெருக்கமாகவே காட்டி நின்றீர். வெண் பொன்நிறக் கொடியரசர் மண்ணில் விளங்கிடும் பாப்பரசர் அவர்க்கே எமது அன்பும்பணிவும் சமர்ப்பித்தோம் தம்பாதம்தனிலே.

**ஆன்மீகத் தலைவர்**

உலகெங்கும் வாழும் ஐந்திலொரு பகுதிமக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 95கோடி கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தலைவராக பாப்பரசர் 2 ஆம் அருளப்பர் சின்னப்பர் விளங்குகிறார்.

கத்தோலிக்கர்கள் செறிந்து வாழும் நாடுகளில் பாப்பரசரை பிரதிநிதித்துவப்படுத்த பாப்பரசரின் பிரதிநிதிகள் நியமிக்கப்படுகிறார்கள். இலங்கை உட்பட 60 நாடுகளுடன் வத்திக்கான் நாடு தூதரக தொடர்புகளைக் கொண்டுள்ளது. இவர்கள் பாப்பரசரின் செய்திகளையும் செயற்பாடுகளையும் கத்தோலிக்க மக்களுக்கு அறிவிக்கவும் மக்களின் அன்பையும், கீழ்ப்படிவையும் பாப்பரசருக்குத் தெரிவிக்கவும் அனுப்பப் படுகிறார்கள். அத்தோடு அந்தந்த நாடுகளுக்கும் வத்திக்கான் நகருக்குமுள்ள ராஜதந்திர தொடர்புகளை பேணிப் பாதுகாக்கவும் நியமிக்கப்படுகிறார்கள்.

இலங்கையில் பாப்பரசரின் பிரதிநிதியாக விளங்கும் மேதகுதோமஸ் யேசெங்நாண் ஆண்டகை தாய்வான் நாட்டைச்சேர்ந்தவர். இவர்தனது பொறுப்புக்களை 31 ஆம் திகதி மே மாதம் 1999 ஆம் ஆண்டு இல. 220, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு-07 இல் உள்ள தலைமைக் காரியாலயத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் அங்கு வசிக்கத் தொடங்கிய பின்னர் யாழ். நகருக்கு விஜயம் செய்வது இதுவே முதற் தடவையாகும். அதுவும். சமாதானத்திற்கான சமிக்ஞைகளும் அமைதிக்கான தூதுக்களும் என்றுமில்லாதவாறு யாழ். மக்களை நெருங்கியிருக்கின்ற வேளையில் அவருடைய இந்த வருகை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது.

**பாப்பரசரின் பிரதிநிதி**

பாப்பரசரின் பிரதிநிதி மேதகு தோமஸ் யேசெங் நாண் ஆண்டகை 1976 ஆம் ஆண்டு முதல் வத்திக்கானின் இராஜதந்திர வட்டாரங்களில் பணி புரிந்திருக்கின்றார். இலங்கைக்கு பாப்பரசரின் பிரதிநிதியாக தமது முதல் நியமனத்தை பெற்றுக் கொண்டஇவர் இதற்கு முன்னரும் இலங்கையில் பாப்பரசரின் பிரதிநிதிக் காரியாலயத்தில் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நிக்கரகுவா, இலங்கை ஸாம்பியா, அல்ஜீரியா, ஒஸ்திரியா, ஈராக், செனகல், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பாப்பரசரின் பிரதிநிதிக் காரியாலயங்களில் பணியாற்றி அனுபவம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலம்ஜேர்மன், பிரெஞ், இத்தாலியம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றுள்ள இவர் 1999 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி இலங்கைக்கான பாப்பரசரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். தைமாதம் 17 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை யாழ். நகரில் தங்கியிருக்கும் பாப்பரசரின் பிரதிநிதிக்கு நம் அன்பையும் மதிப்பையும் கீழ்ப்படிதலையும் நாம் தெரிவிப்பதன் மூலமாக அவர் பிரதிநிதித்துவப் படுத்தும் திருத்தந்தைக்கே அதனைத் தெரிவிக்கின்றோம்.

சமாதானத்திற்கான சமிக்ஞைகளும் அமைதிக்கான தூதுக்களும் என்றுமில்லாதவாறு யாழ். மக்களை நெருங்கியிருக்கின்ற வேளையில் அவருடைய இந்த வருகை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. யாழ். நகரில் தங்கியிருக்கும்போது 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை புனித பத்திரிசியார் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொள்வார். அன்று மாலை பண்டத்தரிப்பில் தற்காலிகமாக அமைந்திருக்கும்புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் திருப்பலி ஒப்புக் கொடுப்பார்.

19 ஆம் திகதி சனிக்கிழமை காலை மறைந்த முன்னாள் ஆயர் மேதகு ஜெறோம் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் நூற்றாண்டு ஞாபகார்த்த கட்டடத்தைஆசீர்வதித்து திறந்து வைப்பார். அதன் பின்னர் இளைப்பாறிய முன்னாள் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையின் குருத்துவ60 ஆம் ஆண்டு நிறைவுத் திருப்பலியை மடுத்தீனார் குருமடத்தில் நிகழ்த்தவுள்ளார். அன்று மாலை பருத்தித்துறை மறைக்கோட்டத்துக்கு செல்வார்.

20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அமலமரித்தியாகிகளின் குருமடம்கொழும்புத் துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி ஆகியவற்றுக்குவிஜயம் செய்வார். 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆயருடைய சிற்றாலயத்திலிருந்துஆடம்பரமாக பாப்பரசரின் பிரதிநிதி அழைத்துச் செல்லப்பட்டு புனித மரியன்னைபேராலயத்தில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுப்பார். அதன் பின்னர் ஒரு பொதுவானவர வேற்பு வைபவம் மரியன்னை பேராலய திறந்த வெளியரங்கில் நடத்தப்படும்.

21 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்புக்கு பயணமாவார். யாழ். நகரில் அவருக்கு அளிக்கப்படும் மகத்தான வரவேற்பு வெற்றியளிக்கவும் அவரின் பணியின் பயன்கள் முற்று முழுதாக நிறைவேறவும் வாழ்த்துவோம். □

## விண்ணப்பம் கோரப்படுகிறது

(செம்பியன்பற்று)

வடமராட்சிகிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட, பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடமிருந்து, விளையாட்டுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களே விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி. பி. வேலாயுதம்பிள்ளை அறிவித்துள்ளார்.

(செ-42)

## நினைவஞ்சலியும் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை சர்வவோதய அறங்காவலர் அமரர் கந்தையா திருநாவுக்கரசின் நினைவஞ்சலியும், திருமலர் வெளியீட்டு விழாவும் நாளை மறுதினம் திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் வி.சிவசாமி தலைமை தாங்குகிறார். (செ-77)

## காரைநகரில் தையல் பயிற்சிநெறி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் வடக்கு-கிழக்கு மாகாணக் கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வருடாந்தம்நடத்தப்படும்தையல் பயிற்சி நெறி இவ்வருடம் காரைநகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் அல்வின்வீதியில் அமைந்துள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் இப் பயிற்சி நெறி நடைபெற்று வருகிறது.

(செ-75)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் ஊழியர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 35 வது வருடாந்தப்பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30மணிக்குநாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ)

## வட்டுக்கோட்டை காலநடை வ.கூ.சங்கம் பெயர் மாற்ற நடவடிக்கை

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டைகால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் என்னும் பெயரை, வலி. மேற்கு கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் என பெயர் மாற்றம் செய்வதற்கு, அந் நிர்வாகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது வரை காலமும் வட்டுக்கோட்டை எல்லைப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வந்த இச் சங்கம், தன் எல்லைப் பரப்பை அதிகரித்து செயற்படவுள்ளது.

நாளை சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடை பெறவுள்ள பொதுக் கூட்டத்தில் மேற்படி பெயர் மாற்ற பிரேரணையை சமர்ப்பிக்கவுள்ளதாக, சங்க நிர்வாக சபை தெரிவித்துள்ளது. (செ-216)

## தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் விளையாட்டுப் போட்டிகள்

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றன.

இந்த வகையில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

உதைபந்தாட்டப் போட்டித் தொடரில்நாமகள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யுத் விளையாட்டுக் கழகமும் கலைவாணி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கணேசன் விளையாட்டுக்கழகமும்மோதவுள்ளன.

வலைப்பந்தாட்டப் போட்டியில் கலை ஒளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளஞ்சுடர் விளையாட்டுக் கழகமும் பாரதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யூனியன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

உதைபந்தாட்டப் போட்டியில் 16 விளையாட்டுக்கழகங்களும் வலைப்பந்தாட்ட ஆண்கள் பிரிவில் 8 விளையாட்டுக் கழகங்களும் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-79)

## மட்டக்களப்பு மயிலந்தனை படுகொலை

# விசாரணையை சிங்கள யூரிகள் முன் நடத்த மேல் நீதிமன்றம் உத்தரவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பூனானை மயிலந்தனை கிராமத்தில் 1992 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் அப்பாவித் தமிழ் மக்கள்மீது படையினர் மேற்கொண்ட படுகொலைகள் தொடர்பான விசாரணையை சிங்கள யூரிகள் சபை முன்னிலையில் நடத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மயிலந்தனை கிராமத்தைச் சேர்ந்த சுமார் 35 தமிழர்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக வழக்கு நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட கொழும்பு மேல் நீதிமன்றநீதிபதி எஸ். சிறிஸ்கந்தராஜா இவ்வழக்கு விசாரணையை எதிர்வரும் யூன் மாதம் 25 ஆம் திகதி சிங்கள யூரிகள்சபை முன்னிலையில் மேற்கொள்ளப்பட வேண்டும்மெனவும்,

இக் கொலையுடன் சம்பந்தப்பட்ட 21 படைவீரர்களில் உயிரிழந்த மூவரைத் தவிர ஏனையோர் நீதிமன்றத்திற்கு சமுகம் அளிக்கவேண்டுமெனவும் உத்தரவிட்டுள்ளார்.

இப் படைவீரர்களுக்கெதிராக 81 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதுடன் சுமார் 70 பேரின் சாட்சியங்கள் பதியப்பட்டுள்ளதாகவும் நீதிவான் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

## காங்கேசன் முகாமில் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த நால்வர் தடுத்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை குற்றத் தடுப்பு புலனாய்வுப்பொலிஸ் நிலையத்தில் நால்வர்தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அங்கு சென்றுதிரும்பிய யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பதிகாரிஎன். ஜீவேஸ்வரா தெரிவித்துள்ளார்.

கடந்தமாதம் 24ஆம் திகதி மீசாலை கேணியடி வீதிப் பகுதியில் வீட்டில் வைத்து கைது செய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களானகணபதி தம்பு, தம்பு நேசமணி, தம்புகிருபாகரன், தம்பு சிவகுமார் ஆகிய நால்வருமே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-10)

## நியமனக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றும் எஸ். சிவராசாவுக்கான நிரந்தர நியமனக் கடிதம் வ. கி. மா. கல்வியமைச்சின் செயலாளர் க. சண்முகலிங்கத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (செ)

# உ. த. மாணவர்களுக்கான அறிவியல் வினாக்கள்

## இல- 90தொகுப்பு: ரீ. மயூரன்

### பொது அறிவு

● பின்வருவன நிகழ்ந்த ஆண்டைத் தருக?
1. சீனா குடியரசானது —
2. சீனப் பெருஞ்சுவர் கட்டப்பட்டது — — — —
3. அமெரிக்க ஜனாதிபதி கெனடி சுடப்பட்டது — —
4. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டறிந்தது — —
5. ஜவஹர்லால் நேரு இறந்தது — — — — —

● 6- 10 வரையனா வினாக்களில் தரப்பட்ட 4 விடைகளுள் சரியானதைத் தெரிக
6. நைல்நதியின் நீளம் எது?
(1) 6595Km (2) 6296Km (3) 6693Km
(4) 6020Km
7. திருக்குற்றாலக் குறவஞ்சி என்ற நூலை இயற்றியவர்?
(1) இறையனார் (2) நக்கீரர் (3) இராசப்பகலிங்க -ராயர் (4) சம்பந்தர்
8. மிகப் பெரிய வைரக்கல் சுரங்கம் எங்கு உள்ளது?
(1) நெதர்லாந்து (2) சீனா (3) தென்னாபிரிக்கா
(4) இங்கிலாந்து
9. மிகப் பெரிய இராணுவம் எங்கு ள்ளது?
(1) அமெரிக்கா (2) சீனா (3) இங்கிலாந்து
(4) இந்தியா
10. இத்தாலிய அரசின் அலுவலகக் கோவை எது?
(1) Blue Book (2) White Book (3) Green Book
(4) Yellow Book

● கணனித்துறையில் பாவிக்கப்படும் பின்வரும் சுருக்கங்சட்கு உரிய விரிவாக்கத்தைத் தருக?
11. LAN: — — —
12. WWW: — — — — — —
13. VSAT: — — — —
14. CPU: — — — — —
15. HTTP: — — — —

● பின்வரும் நாடுகளின் தலைநகரங்களைத் தருக?
16. பிலிப்பைன்ஸ் — — — — —
17. பாகிஸ்தான் — — — — —
18. அவுஸ்திரேலியா — — — —
19. சீனா — — — —
20. ஜப்பான் — — — — —

### நுண்ணறிவு

● பின்வரும் 5 சொற்களில் ஒன்று ஏனையவற்றுடன் வேறுயடுகிறது. அதன்கீழ்கிறிடுக
21) சூரியன், நட்சத்திரம், மின்மினி, சந்திரன், மேகம்
22) கிலோ கிராம், கிராம், றாத்தல், தொன், லீற்றர்
23) கதிரை, முதிரை, மதுரை, குதிரை, பதிரை
24) Kulam, Pulam, Dolam, Colum, Thalam
25) 52, 84, 68, 79, 78

● பின்வரும் வினாக்களில் உள்ள எண்தொடர்களில் அடுத்து வரும் எண்ணைக் கண்டுபிடிக்க
26) 11, 46, 44, 42, 40
27) 51, 45, 39, 33, 37
28) 1 32, 1/16, 1/8, 1/4, 1/2
29) 25, 5, 16, 4, 9
30) 1, 0. 1, 0. 01, 0. 001

● பின்வரும் வினாக்களில் தரப்பட்ட- முதல் இரு சொற்களுக்கு இடையிலான ஒப்புமையை இனங்கண்டு அடுத்துவரும் சொல்லுக்கான சோடிச் சொல்லை அடைப்பிலிருந்து தெரிக?
31) தண்ணீர்- திரவம், புலி- (சிங்கம், உயிர் உள்ளது, மிருகம் ஓடும்)
32) தேனி- தேன்கூடு, யானை-(கூட்டம், தொகுதி, திரள், தொகை)
33) பால்- தயிர், நீர்-(திரவம், நீராவி, உறைபனி, திண்மம்)
34) படர்க்கை- 5, மேகம்-(2, 3, 4, 5)
35) AND- DNA, MAN– (AMN, NAM, MNA, MAN)

● ஒரு நிரையில் அமுதன், அழகன், அருணன், அமலன், அகிலன் ஆகிய ஐந்து சிறுவர்கள் இருந்தனர். ஒரு கரையில் அருணனும், மறுகரையில் அமலனும்இருந்தனர். அகிலனுக்கருகில் அமலன் இருந்தான், அழகனுக்கருகில் அருணன் இருந்தான். (முதலாவதாக இருந்தவர் அமலன்)
36) அழகனுக்கும், அமலனுக்கும் இடையில் எத்தனை சிறுவர்கள் இருப்பர்?
37) அமுதனுக்கும் அருணனுக்கும் இடையில் இருந்தது யார்?
38) மத்தியில் இருந்தவர் யார்?
39) அமுதனுக்கும், அமலனுக்கும்இடையில் இருந்தது யார்?
40) முன்னுக்கிருந்து மூன்றாவதாக இருப்பவர் யார்?

## அறிவியல் பகுதி வினா இல: 90

''வலம்புரி''
இல: 15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ____________

சொந்த முகவரி: ____________

கற்கும் பாடசாலை ____________

மாணவர் கையொப்பம்: ____________

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பவும்.

## வரவேற்பு உபசார விழா

(யாழ்ப்பாணம்)

அரசடி ஜனசக்தி சனசமூக நிலைய பூங்கா முன்றலில், யாழ். மாநகரசபை முதல்வர் செ. கந்தையனுக்கு வரவேற்புபசார விழா, இன்று பி. ப. 4. 00 மணிக்கு சனசமூக நிலைய தலைவர் த. பாலா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் வி. ஆனந்த சங்கரி மற்றும் மாநகரசபை உறுப்பினர்களும்கலந்து கொள்ளவுள்ளனர். (உ-3)

## அ.அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

பண்டாரநாயக்க மாவத்தை கொழும்பு-12என்னும்முகவரியில் வசிக்கும் டேவிட்வின்சன் பரமேஸ்வரி என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு'வலம்புரிக்'காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

(செ)

## அறிவியல் பகுதி - 89 விடைகள்

01) கி.மு 44
02) ஆரியர்
03) அனுலா
04) கந்தப்பளை
05) சீதுவை
06) உறம்மிங் பேட்
07) வினாகிரி
08) மூஞ்சூறு
09) பர்மா
10) 5 நதிகள் உடையதால்
11) ✓
12) ✓
13) ✓
14) ✓
15) ×
16) ஜோர்தான்
17) மாலைதீவு
18) அவுஸ்திரேலியா
19) எகிப்து
20) இந்தோனேசியா
21) படங்கு
22) சங்கமம்
23) கல்
24) 345
25) 2632
26) அங்குரம்
27) அபூர்வம்
28) சங்கமம்
29) குந்தகம்
30) தொடக்கம்
31) CH
32) EA
33) GAA
34) FBA
35) DCA
36) GA
37) A
38) JA
39) J
40) A

## அறிவியல் வினா இல 89

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

01) சி.சயந்தன், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
02) அ.றெக்ஸ் நிஷாந்தன், சண்டிலிப்பாய்.
03) சி.கார்த்திகா, நாவலர் வீதிஆனைப்பந்தி.
04) ரா.ஜனனி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
05) அ.தீபன், அளவெட்டி.
06) யோ.தர்ஷினி, மாகியப்பிட்டி.
07) சி.சிறிக்காந், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
08) சி.பிரியா, யாழ்ப்பாணம்.
09) க.சிவாஜினி, யாழ். இந்து மகளிர் கல்லூரி.
10) சி.சிவதா, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- விடைகளை வேறு தாளில்எழுதி அனுப்பவும், இதற்கான விடைகளை23.01.2002 இற்கு முன்எமக்கு கிடைக்கத் தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## உள்ளூராட்சித் தேர்தலுக்கு தடை போடுவது ஜனநாயக உரிமை மீறல்

### கண்டிக்கிறது ஈ.பி.டி.பி.

(யாழ்ப்பாணம்)

இனப் பிரச்சினை, தீர்வு பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளதால் நிரந்தரத் தீர்வொன்று காணப்படும் வரை உள்ளூராட்சித் தேர்தல்கள் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அவசியமற்றவை என தமிழ்த்தேசிய கூட்டமைப்புத் தலைவர்கள் கூறியிருப்பது மிகவும் கண்டனத்திற்கு உரியதாகும்.

இது மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் உரிமையையும் வாக்குரிமையையும் மக்களின ஜனநாயக உரிமைகளையும் திட்டமிட்டு மறுதலிக்கும் செயலாகும்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தகவல் தொடர்புத் துறை வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு ஒத்துழைத்தவர்கள் மக்களின் அன்றாட நிர்வாக விவகாரங்களைக் கவனிக்கும் அமைப்புகளுக்கு தேர்தல் நடத்தப்படுவதைத் தடுக்க முனைவது கவலைக்கும், கண்டனத்திற்கும் உரியதாகும்.

இத்தகையவர்களின் இது போன்ற கபடத்தனமான செயற்பாடுகளாலேயே கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு அரசியல் தலைமை வழங்குவதற்கான தேர்தல் நடத்தப்படாமல் இருக்கிறது.

கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி சபைகளுக்கும் மட்டக்களப்பு மாநகர சபை, திருமலை, வவுனியா நகர சபைகள், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டத்தின் பிரதேச சபைகள் என்பனவும் மக்கள் பிரதிநிதிகளின்றி அதிகாரிகளின் ஆட்சியே நீடிக்கின்றது.

உள்ளூராட்சி அமைப்புகளில் மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புகள் அவசியம் என்பதனாலேயே இதற்கான இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வடக்கு-கிழக்கு மாகாணத்தின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் வரை எந்தத் தேர்தலும் நடத்தப்படக்கூடாது. என்ற நிலை இருந்திருப்பின் இந்தப் பிரதிநிதிகள் கூட தமது பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றிருக்க முடியாது என்பதே உண்மையாகும்.

எனவே மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டதாகக் கூறிக் கொள்பவர்கள் மக்கள் தமது ஜனநாயக கடமைகளை நிறைவேற்றுவதற்கு முட்டுக்கட்டை போடும்வகையில் செயற்படுவது வரவேற்கத்தக்க முன்மாதிரியாக இருக்காது என்பதை திட்டவட்டமாக கூறிவைக்கஆசைப்படுகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கப்பல் பயணச் சீட்டை இன்று முதல் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

''சிற்றி ஒவ் றிங்கோ''கப்பலில் பயணம் செய்வதற்கு பயண அனுமதிப்பத்திரத்தை பெற்றவர்கள், இன்று முதல் கப்பல் முகவரிடம்பயண அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பித்து பயணச்சீட்டை பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ் சிவில் நிர்வாக அதிகாரி அறிவித்துள்ளார்.

கப்பல்முகவர்நிறுவனமான ஜி.என்.கே.பி.குறூஸ் நிறுவனம்

யாழ்.ப.நோ.கூ சங்கதலைமையகத்துக்கு முன்பாக70, கே.கே.எஸ் வீதியில் உள்ள கட்டடத்தில் திறக்கப்பட்டுள்ள கப்பல் முகவர் நிறுவனத்தில் பயணச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

வாரத்தில் இரு தடவைகள் நடைபெறவுள்ள இக் கப்பல் சேவையில் முதலாவது சேவை எதிர்வரும்செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறையிலிருந்து இடம் பெறவுள்ளது.

செவ்வாய் வியாழன் ஆகிய நாட்களில் இச்சேவை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

## காலம் கடந்த இறப்பு, பிறப்பு பதிவுகள் இருதினங்கள் இடம்பெறும்

(தென்மராட்சி)

பதிவாளர்நாயகம் திணைக்களத்தின் 100 நாள்வேலைத் திட்டத்தின் கீழ், சாவகச்சேரி, பளை, மருதங்கேணி, மற்றும் வலிகாமம் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, வலிகாமம் பிரதேசங்களில் தங்கியிருக்கும் மக்களினதும் அப்பகுதியில் நிரந்தரமாகக் குடியிருப்பவர்களினதும் 1985 ஆம் ஆண்டின் பின் பதியப்படாத பிறப்பு, இறப்புக்கள் எதிர்வரும் 23 ஆம் 30 ஆம் திகதிகளில் வலிகாமம்தெற்கிலும், பருத்தித்துறையிலும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை பிறப்பு, இறப்பு பதிவாளர் நாயகத்தின் யாழ். மாவட்டக்கிளை அவ்வப்பிரதேச செயலர்களின் அனுசரணையுடன் மேற்கொண்டு வருகின்றது.

இதனடிப்படையில் வலி தெற்கு, வலிவடக்கு, வலி தென்மேற்கு பகுதிகளில் நிரந்தரமாக மற்றும் இடம்பெயர்ந்து வசிப்பவர்களுக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி உடுவில் பிரதேச செயலகத்திலும்,

வடமராட்சி, மருதங்கேணி சாவகச்சேரி, பளை, வலிகாமம் பகுதிகளில் நிரந்தரமாக மற்றும் இடம்பெயர்ந்து வசிப்பவர்களுக்கு 30 ஆம் திகதி பருத்தித்துறை காணி மாவட்ட அலுவலகத்திலும் காலை 9 மணிமுதல் பி. ப. 2.00 வணிவரை இச் சேவைகள் இடம்பெறும்என மேலதிக மாவட்டப் பதிவாளர் எஸ். சதாசிவஐயர் குறிப்பிட்டுள்ளார். (உ-77)

## மரவள்ளிக் கிழங்கு விலை உயர்வு

(இணுவில்)

இணுவில், சுன்னாகம் பகுதிகளில் கடந்த சில வாங்ரகளாக மரவள்ளிக்கிழங்கின் விலை அதிகரித்துள்ளது.

இதேவேளை, இப்பகுதிகளில் மரவள்ளித் தோட்டங்களில் திருட்டுக்கள் அதிகரித்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (செ-49

பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகநட்பு ஒரீஇ விடல்.

குறள்

# வலம்புரி

## சிங்கம்- புலி இரண்டு தேசியகொடி

இலங்கை அரசு சமாதானப் பேச்சு வார்த்தையை நடத்த விரும்பினால் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வன்னியில் பத்திரிகையாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

சு. ப. தமிழ்ச்செல்வன் கூறிய புலிகள் மீதான தடைநீக்கம் புதியதொரு விடயமல்ல. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா புலிகளுடன் பேச்சு நடத்துவதாக கூறிய போதும் இதே கருத்தை விடயத்தை விடுதலைப் புலிகள் முன்வைத்திருந்தனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்துவிட்டு அவர்களுடன் பேச்சு நடத்துவதென்பது நடைமுறைக்குப் பொருந்தாது என்பது புலிகள் தரப்பின் நியாயமான கருத்தாகும்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதில் சந்திரிகாவின் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு தயக்கம்காட்டியதாலேயே அப்போதைய சமாதான முயற்சிகள் தோல்வி கண்டது.

இந் நிலையில் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கா புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்த முன்வந்தாரெனில், முதலில் அவர் விடுதலைப் புலிகள் மீதானதடையை நீக்கவேண்டும். புலிகளின் தடையைநீக்காமல் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தலாமென பிரதமர் ரணில் எண்ணியிருப்பின் அஃது மாபெரும் தவறாகும். புலிகளின் தடையைநீக்காமல் புதிய ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் பேசுவதாக இருந்தால் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கத்துடனும் புலிகள் பேசியிருப்பார்கள். எனவே விடுதலைப் புலிகளுடன் சமாதானபேச்சை ஆரம்பிக்கத் துணிந்த பிரதமர் ரணில், புலிகள் கேட்காமலேயே அவர்கள் மீதான தடையை நீக்கவேண்டும் மாறாக ரணிலும் பேச்சுக்குப்பின்னரே தடைநீக்கமென்றால் அது இலங்கைத் தீவுக்கு சிங்கம் - புலி எனும் இரண்டு தேசியக் கொடிகளை வழங்கச் செய்யும் என்பதில் எந்த ஐயுறவுமில்லை.

---

**வெள்ளி நற்சிந்தனை**

# சுவாமி விவேகானந்தரின் போதனைகள் வழி

# விவேகம் கொள்வோம் வீரர்கள் ஆவோம்

இளைஞர்களே வீரமுடன் வாழ்வை எதிர்கொண்டு வெற்றிகரமாக இறைஞானத்தை அடைந்திட விவேகானந்தர் அழைக்கின்றார். கோழைகளே வாழ்வை கண்டு பயந்து ஊழலும் உருட்டுபிரட்டும் செய்து சொத்து பணம் சேர்க்க ஆலாய் பறக்கிறார்கள். கோழைகளே மனிதர்களை கண்டு பயந்து பொய்யும், சுத்துமாத்துமான போலி வாழ்வைவாழ்கின்றனர். வீரனே சத்தியத்துடன் நேர்மையாக நடந்து வாழ்வில் அமைதியையும் வெற்றியையும் காண்கின்றான். வீரனாலேயே (நிகழ், எதிர்கால) உலகத்தை கண்டு பயம் கொள்ளாது தீரமுடன் வாழ்வைஎதிர்கொண்டுஇறைஞானத்தை அடையமுடியும். எனவே விவேகம் கொள்வோம், வீரர்கள் ஆவோம்.

**பலவீனங்கள்**

ஏதோ பிறந்து விட்டோம். எப்படியாவது வாழ்ந்து விட்டு போவோம்என்பது அறிவீனர்களின் பாதையாகும். பிறந்த சமூகத்தை கண்டு பயந்து போலியான முகமூடிகளை அணிந்து வாழ்ந்து இறந்து போவதுகோழைகளின் பாதையாகும். உலக வாழ்வில் புதைந்து நாளை இவற்றை விட்டு விட்டு போக வேண்டியதே என்பதையும் தெரிந்து அதற்குள் அமிழ்ந்து வாழ்வது பலவீனர்களின் இயலாமையின் வெளிப்பாடாகும். ஏன் பிறந்தோம்? பிறப்பின் நோக்கம் என்ன? என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்பவனே உண்மையான அறிஞன். பிறப்பின் நோக்கத்தை அறிந்து இவ்வாழ்வு முடிவதற்குள் அதை அடைபவனே விவேகன். அறிஞனாகவும், விவேகனாகவும் இருப்பதற்கு அடிப்படையில்வீரம் தேவை. வீரம் உள்ளவனாலேயே சத்தியத்தை சிந்திக்க முடியும், சத்தியத்தை தேடமுடியும், சத்தியத்தை அடையமுடியும். 'வீரனுக்கே வாழ்வு' என்பது விவேகானந்தரின் முழக்கம்.

ஆன்மீக வாரத்தை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

டாக்டர்

**இ சிவசங்கர்**

**இறை ஆனந்தம்**

எல்லாம் வல்ல எல்லாம் உடைய இறைஞானத்திற்கு முன்னால் சிறுசிறு தற்காலிக உலக பொருட்களை அடைய வாழ்வுச் சக்தியை செலவழிப்பது அர்த்தமுடையதா? பயனுடையதா? நித்திய இறை ஆனந்தம் எமக்குள் பொக்கிஷமாக இருக்கையில் அதை அடைய முயற்சிக்காது சில்லறை வெளி விடயங்களில் எமது சக்தியை செலவழிந்து இறுதியில் விரக்தியும், சோர்வும் அடைந்துஇறப்பது விவேகமா? எமக்குள் இருக்கும் இறைவனை இறை உலகத்தை சாதனை மூலம் அடைந்து முடிப்பதற்கே பிறவி எடுத்தோம். அதை அடைவதே நிறைவு தரும். அதுவே எம்மை விட்டு நீங்காத ஆனந்தமாகும். சிந்திப்போம் தெளிவடைவோம் இலக்கை நோக்கி திரும்பி பயணத்தை தொடங்குவோம்.

**விவேகமே நித்திய ஆனந்தம்**

இறைவனே படைத்தான், படைத்தவன் படியளப்பான் என்கின்றோம். ஆனாலும் பணத்துக்காக ஆலாய் பறக்கிறோம். இறைவனிடமும் இறைஞ்சுகின்றோம். அவனின்றி அணுவும் அசையாது. அவன் நன்மையையே செய்வான் என்கின்றோம். ஆனாலும் பாதுகாப்புத்தேடி பயந்து பிரார்த்திக்கின்றோம். சர்வ வியாபகன், சர்வ வல்லவன் என்கின்றோம் ஆனாலும்நாம்தான் அவனை பாதுகாத்து வளர்க்க வேண்டும் என்று தலை தெறிக்கச் செயற்படுகின்றோம். அகத்தில் இருக்கும் அவனை, அவன் உலகை அடைவதே பிறப்பின் நோக்கம் என்பதை விவேகம் கொள்வோம். அதை அடைந்துவிட்டால் அனைத்துமான சர்வ வல்லவனிடமிருந்து அனைத்தும் கிடைக்கும் தானே. எனவே அதை அடைவதே விவேகம். தன்னை வென்று தன்னை அறிந்தவனே அகத்துள் இருக்கும் இறை உலகத்தை அடைந்து இறைவனுடன் கலக்கின்றான். தன்னை வெல்வதே அதி உயர் விவேகம், வீரம். வென்றவனுக்குக் கிடைப்பதோ இறை ஆனந்தம், நித்திய ஆனந்தம்.

விவேகமும், வீரமும் கொண்டோரே சில்லறை விடயங்களுக்கு துறவு கொண்டு இறை ஆனந்தத்தை பெறும் பாக்கியவான்களாகின்றனர். விவேகம், வீரம் துறவு கொண்டு இறை ஆனந்தத்தை அடைந்ததற்கு விவேகானந்தர் ஓர்வாழ்வியல் உதாரணமாக இருக்கின்றார். எமது பரம்பரையினராகிய பல ரிஸிகளும், சித்தர்களும் இத்தகையவர்களே. முயல் வேட்டையில் சக்தியை வீணாக்காது யானைக்கு ஈட்டி எறிய அவர்கள் அழைக்கின்றனர். விவேகம் கொண்டு ஆனந்தத்தை துய்ப்பதற்கு அழைக்கின்றான் விவேகானந்தன். வீரமுடன் செயற்பட்டு (அக) பகையை வென்று வெற்றி முரசம் கொட்டுவோம். பிறப்பு இறப்பை அறுத்து,

விவேகம் கொள்வோம்.
ஆனந்தம் பெறுவோம்.

---

# பல்கலை மாணவரின் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு தமிழ் காங்கிரஸ் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக மாணவரால் உணர்வு பூர்வமாக முன்னெடுக்கப்படும் பொங்கு தமிழ் நிகழ்வை வரவேற்கிறோம். தேசப்பற்று மொழி உணர்வைக்கொண்ட இம்மாணவர்களை வாழ்த்துகிறோம்.

அகில இலங்கைத்தமிழ்காங்கிரஸ் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும்,

சுயநிர்ணய உரிமை' மரபுவழித் தாயகம், தமிழ்தேசிய இனம், போன்ற தமிழர் தம் உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என பொங்கிஎழும் இப்போராட்டம் ஒருவரலாற்று மறுமலர்ச்சி.

சர்வதேச சமூகத்திற்கும், அரச இயந்திரங்களுக்கும் இந் நிகழ்வு ஓர் எடுத்துக் காட்டாகும்.

அரசு, தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர்கள் மீதான தடையை உடனடியாக நீக்க வேண்டும் என்றும் அகிம்சைப்போராட்டம்வாயிலாக கிளர்ந்துஎழும் பல்கலைக்கழக சமூகத்துடன் எம்மையும்பிணைத்துக்கொள்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

---

## தினசரி தியானம்

## அக்னி ஜுவாலை

சித்தமிசை குடிகொண்ட அறிவான
தெய்வமே, தேஜோமய ஆனந்தமே

**தாயுமானவர்**

கொழுந்து விட்டெரியும் தீக்கு விறகு இரையாகிறது. அருள் தந்தையே, அக்னி ஜுவாலை சொரூபமாகிய உன்னிடத்து நான்லயமாவேனாக நான் எனது என்பதெல்லாம் உன்மயமாகுக.

விறகு தீக்கு ஏற்றதாயிருந்தால் போதுமானது எந்த வனத்திலிருந்து வந்தது. யாரால் பயிர் செய்யப்பட்டது என்பதெல்லாம்பயன்படாத கேள்விகள் ஊர், பேர், உற்றார், உறவினர் என்ற விசாரங்களெல்லாம் மனிதன் விஷயத்தில் பயன்படாதவைகள். மனிதன் கடவுளுக்கு ஏற்றவனானால் போதுமானது. விறகு தீமயமாவது போன்று தான், தனது என்பனவற்றை விட்டவன் தெய்வ மயமாகிறான்.

**ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்**

---

## நிவாரணம வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கைதடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இம் மாதத்திற்கான நிவாரணப் பொருட்களை 19 ம் திகதி இடம்பெயர்ந்த மக்களுக்கு விநியோகிக்கவுள்ளது.

இதேவேளை இரண்டாவது தடவையாக தற்போது பாவனையாளர்களுக்கு 2 லீற்றர் மண்ணெண்ணெயும் வழங்கப்படுகிறது என்று சங்கப்பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (வ)

---

## புதிய ஜனாதிபதி மாளிகை அமைக்கும் திட்டம் தவிடுபொடி

(கொழும்பு)

ஜனாதிபதிக்கான புதிய மாளிகை ஒன்றை அமைக்கும் திட்டம் எந்தக்காரணம் கொண்டும் நடைமுறைப் படுத்தப்பட மாட்டாதென வீட்டுவசதிகள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் 4 மில்லியன் ரூபா செலவில் இந்த மாளிகை அமைப்பதென திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இந்த மாளிகையை அமைப்பதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம்ஒரு போதும் அனுமதி வழங்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ-5)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்பரியோவான் கல்லூரியின் பரிசளிப்புவிழா இன்று காலை 9.30 மணிக்கு மதுரம் சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மறைமாவட்ட ஆயர் அதி. வண. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளின் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம விருந்தினராக 2 வது அருளப்பர் சின்னப்பரின் இலங்கைக்கான தூதுவர் அதி. வண. கலாநிதி தோமஸ் யேசெங்நாண்கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினராக பழையமாணவர் சங்கத்தின் கொழும்பு கிளையின் தலைவரும் சீபாங்க பொது முகாமையாளருமான பி.ஜே. வின்சென்ற் கலந்துகொள்ளவுள்ளார். (எ)

## விறகுக்கு அனுமதி

(அல்லைப்பிட்டி)

தீவுப் பகுதியிலிருந்து விறகு தாராளமாக யாழ். நகருக்கு எடுத்து வரப்படுகின்றது.

வெளியூர்களைச் சேர்ந்தவர்கள் வியாபாரிகள் லொறிகளில் விறகினை யாழ். நகருக்கு எடுத்து வருகின்றனர்.

முன்னர் விறகுஎடுத்து வருவதற்கு கடற்படையினர் அனுமதி மறுத்த பொழுதும் தற்பொழுது அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-231)

## அரசு – புலிகள் யுத்தநிறுத்தம்

# ஒருவருடத்திற்கு நீடிப்பதா? மாதாமாதம் நீடிப்பதா?

### அடுத்தவாரம் தெரியவரும்

இனப்பிரச்சனைக்கு சமாதானப் பேச்சு வார்த்தை மூலம் அரசியற் தீர்வு ஒன்றை காணும்பொருட்டு ஒருவருட நிரந்தர யுத்தநிறுத்தத்தை செய்வதற்கு அரசு விரும்புவதாகவும் விடுதலைப் புலிகள் மாதாமாதம் நீடிக்கவே விரும்புவதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது.

லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை கடந்த செவ்வாய்க் கிழமை சந்தித்துப் பேசிய நோர்வேத் தூதுக்குழுவினரிடம் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு குறித்து எடுத்துக்கூறியதாகவும் தூதுக் குழுவினர் அரசின் யுத்த நிறுத்த அறிவிப்புத் தொடர்பாக கருத்தை பாலசிங்கத்திடம் எடுத்துக்கூறியதாகவும் தெரியவருகிறது.

இந்நிலையில் யுத்த நிறுத்தத்தை ஒருவருடத்திற்கு நீடிப்பது தொடர்பான அரசின் விருப்பத்தை புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு அறிவித்து அவரது முடிவை எடுத்துக் கூறுவதாக நோர்வேத் தூதுக் குழுவினரிடம் பாலசிங்கம் கூறியதாகவும் தெரியவருகிறது. இதே வேளையுத்த நிறுத்தம் தொடர்பான புலிகளின் இறுதி முடிவை அறியும் பொருட்டு அடுத்த வாரம் நோர்வேத் தூதுக் குழுவினர் மீண்டும் பாலசிங்கத்தை சந்திக்கவுள்ளனர்.

# இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தபோது தமிழர்களுக்கு இருண்டயுகம் ஆரம்பித்தது

### பொங்குதமிழ் நிகழ்வில் துணைவேந்தர் உரை

(யாழ்ப்பாணம்)

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றது. ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அன்றிலிருந்து தான் இருண்டயுகம் தொடங்கியது இவ்வாறு யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார். யாழ் பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் நேற்று பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் ஓராண்டு நிறைவு அனுஷ்டிக்கப் பட்டது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

போத்துக்கேயர், ஒல்லாந்தரிடம் இலங்கையை இழந்துபோக ஒல்லாந்தர் அதனை ஆங்கிலேயரிடம் இழந்தனர். ஆனால் தமிழ் மக்களோ தமது உரிமைகளை ஸ்ரீலங்கா அரசிடம் இழந்துவிட்டனர். இது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

1949 ம் ஆண்டு தமிழ் மக்கள் மீது திட்டமிடப்பட்ட ஒடுக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன அதன் முதற்கட்டமாக தமிழ் வம்சாவளியினரான இந்தியப் பிரஜைகளின் குடியுரிமைகள் பறிக்கப்பட்டு அவர்கள் விரட்டப் பட்டனர். அன்று தொடக்கம் இன்று வரை இன ஒடுக்கல் தொடர்கதையாகவே உள்ளது.

1995ம் ஆண்டிற்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் தமிழ்மக்கள் மிகவும் கேவலமான முறையில் நடத்தப்பட்டனர். அடையாள அட்டையின்றி வீதிகளில் நடமாட முடியாது. தமிழைக் கூட சுதந்திரமாக கதைக்க முடியாத நிலை காணப்பட்டது இவற்றையெல்லாம் தமிழ் மக்களுக்கு உணர்த்தவும் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை அவசியம் என்பதை வலியுறுத்தவும் அனுஷ்டிக்கப்பட்டதே பொங்கு தமிழ் நிகழ்வாகும்.

இன்று சமாதானத்தின் ஒளிக்கீற்று தென்படத்தொடங்கியுள்ளது. இது கடந்த காலங்களையும் போல் அல்லாது நீடித்து நிலைக்க வேண்டும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிப்பதாக அமையவேண்டும் என்றும் கூறினார். (இ-9-10-19)

### புலிகள் மீதான..

தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு 1994ல் சிங்கள மக்கள் வழங்கிய ஆணைபோல் நடந்து முடிந்த தேர்தலிலும் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

இந் நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் உள்ளுராட்சி தேர்தல்கள் நடைபெற இருப்பதால் அதற்கு முன்னர் புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக எந்த விதமான இறுதி முடிவுகளையும் எடுக்க முடியாத நிலையில் அரசாங்கம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நோர்வே அரசின் அனுசரணையுடன் இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில் ஏற்படும் முன்னேற்றங்களை பொறுத்தே அரசாங்கம் ஒரு முடிபுக்கு வரவேண்டி இருப்பதாகவும் அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அரசு புலிகள் பேச்சுவார்த்தைக்கான இடம் இதுவரை இன்னமும் முடிவுசெய்யப்படாத நிலையில் புலிகள் மீதான தடையை அரசு அவசர அவசரமாக நீக்கமாட்டதென்றும் அரசின் முக்கிய பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர் (வ)

### பொங்கு தமிழ்...

பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். ஈகச்சுடரை துணைவேந்தர் ஏற்றிவைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார் தொடர்ந்து பொங்கு தமிழ் எழுச்சிப்பாடல் இசைக்கப்பட்டது.

எழுச்சிப்பாடல் இசைக்கப் பட்டுக் கொண்டிருக்கும் போது மாணவர்கள் பொங்குதமிழ்

பாராட்டி வாழ்த்துகின்றோம்.

## அங்கீகரிக்கப்படாத முகவர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம்

### யாழ் நீதிமன்றம் விசாரணை

(யாழ்ப்பாணம்)

அங்கீகரிக்கப்படாத எரிபொருள் முகவர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டதாக யாழ் மேலதிக அரசாங்க அதிபர் கொடுத்த தகவலின் அடிப்படையில் யாழ் மாவட்ட பெற்றோலியக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் அந்தோனிப்பிள்ளையை யாழ் நீதிமன்றம் நேற்று அழைத்து விளக்கம் கேட்டது

யாழ் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜா முன்னிலையில் நீதிமன்றில் பிரசன்னமான பிராந்திய முகாமையாளர் அங்கீகரிக்கப்படாத முகவர்களுககுத் தான் எரிபொருள் விநியோகிக்க வில்லை எனவும் அதனை காங்கேசந்துறை எரிபொருள் விநியோகிக்கும் குதத்தில் கடமையாற்றும் ஒரு அதிகாரியே விநியோகித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அங்கீகரிக்கப்படாத முகவர்களுக்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணெயை பறிமுதல் செய்து அரச அதிபரின் பணிப்பிற்குமைய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பொதுமக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

அத்துடன் அங்கீகரிக்கப்படாத எரிபொருள் முகவர்கள் எரபொருள் விற்பனை செய்யக் கூடாதெனவும் அவ்வாறு விற்பனை செய்வதாயின் அரச அதிபரின் அனுமதி பெற்றிருக்க வேண்டுமெனவும், இந் நடைமுறைகளை மீறுவோர் உயர் நீதிமன்றில் நிறுத்தப்படுவர் என்றும் நீதிபதி அறிவுறுத்தினார். இதே வேளை காங்கேசந்துறை எரிபொருள் குதத்தில் கடமையாற்றும் அதிகாரிக்கு யாழ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஊடாக அழைப்பாணைக் கடிதம் ஒன்றும் நீதிமன்றால் அனுப்பப் பட்டுள்ளது. (இ-10)

### ஹர்த்தாலுக்கு ஆதரவில்லை

(மந்திகை)

புளொட் அமைப்பின் ஹர்த்தால் போதிய அவகாசத்துடன் அறிவிக்கப்படாததால் அதற்கு வடமராட்சி வர்த்தக சங்கங்களின் இணையம் ஆதரவு வழங்காதென இணையத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ந- 23)

### தமிழ்க்கட்சிகளின்...

தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார் நேற்றய கூட்டத் தில் ஐ.தே.கட்சியில் பிரதித்தலைவர் கரு ஜெயசூரியா, பொ.ஜ.முன்னணி யின் பொதுச் செயலர் டி.எம்.ஜெய ரத்னா, ஸ்ரீ.மு.க.தலைவர் ரவூக் ஹக்கீம் த.வி.கூட்டணியின் பொதுச் செயலாளர் இரா.சம்பந்தன் புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அ.இ.த.காங்கிரஸ் தலைவர் க.விநாயகமூர்த்தி, ஜே.வி.பியின் செயலாளர் விமல் வீரவன்ச ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை மலையக மக்கள முன்னணி சார்பாகவும் ஸ்ரீ.மு.க சார்பாகவும் பிரதிநிதி எவரும் இச்சபைக்கு இன்னமும் சிபார்சு செய்யப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது (ந.4)

### இந்திய..

எண்பதுகளில் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே பேச்சுநடந்த வேளையில் இரு தரப்பும் கூட்டறிக்கை வெளியிட்டது. அதில் இந்தியாவுக்கு எதிரான கருத்துக்கள் இடம் பெறுவது தவிர்க்க அப்போதைய அமைச்சர் ஏ.சீ.எஸ் ஹமீத் முயற்சித்தார் ஆனால் இந்திய அமைதிப்படையின் போர் குற்றங்கள் தொடர்பான கருத்துக்கள் அவ்வறிக்கையில் இடம்பெற வேண்டும் என்று பாலசிங்கம் வலியுறுத்தினார். என்றும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது. இதே வேளை

மேற்படி சம்பவம் குறித்த தகவல்கள் திருமதி அடேல் பாலசிங்கத்தின் புத்தகத்திலேயே இடம்பெற்றுள்ளதென அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது. (இ)

## யாழ்/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி 150 வது ஆண்டு நிறைவு சபை சுற்றுப் போட்டிகள்

பாடசாலை/ கழகங்களுக்கிடையிலான சுற்றுப்போட்டிகளுக்கான விண்ணப்ப திகதி 05.02.2002 வரை நீடிக்கப்பட்டுள்ளது. கழகங்களுக்கிடையிலான கூடைப் பந்தாட்டம் (பெண்) சேர்க்கப் பட்டுள்ளது.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்.



பனை அபிவிருத்திச் சபையின்

புதிய தலைவராக இன்று (18.01.2002)

உத்தியோகபூர்வமாகப் பதவியேற்கும்

## திரு. பொன்னையா – சிவபாதம்

அவர்களைப் பாராட்டி வரவேற்பதுடன்

பனம் தொழில் வல்லுனர்களின் சமூக அபிவிருத்தியில் அவரது பணி தொடர வேண்டுமென இறைவனின் பாதாரவிந்தங்களை வணங்கி வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
வலிகாமம் பனை, தென்னை வள. அபி. கூ. சங்கங்களின் கொத்தணி
மானிப்பாய்,

(C/3293)

## நல்லை ஆதீனம்

இன்று மாலை நிகழ்ச்சி நிரல்

**தலைமை:-** செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
(ஆதீன ஆலோசகர் சபை)

**நேரம்:-** பி.ப. 4.00 மணி

இசைக் கச்சேரி:- நாதஸ்வர கலாநிதி N.K. பத்மநாதன் குழுவினர்.

விளம்பர அன்பளிப்பு:- அபிலிங் தொலைத் தொடர்பகம்
நல்லை ஆதீனம் முன்பாக
- 021-3680

பொங்கு தமிழ் எழுச்சிப்பாடல் இசைக்கப்பட்டது.

எழுச்சிப்பாடல் இசைக்கப் பட்டுக் கொண்டிருக்கும் போது மாணவர்கள் பொங்குதமிழ் வாசகங்கள், தமிழீழ வரைபடம் பொறிக்கப்பட்ட வெளிச்சக் கூடுகளை வான்நோக்கி பறக்க விட்டனர். இந் நிகழ்வில் பொங்குதமிழ் ஒலிப்பேழை கவிதை தொகுப்பு என்பன வெளியிடப்பட்டது.

ஒலிப்பேழையை கலைப் பீடாதிபதி பேராசிரியர் கோபால கிருஸ்னஜயர் அவர்கள் வெளியிட்டு வைத்தார் தொடர்ந்து நிகழ்வில் சொற்பொழிவுகள் இடம் பெற்றதுடன் கனடா பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் வாழ்த்துச் செய்தியும் வாசிக்கப்பட்டது. (இ9.10.19)


## A/L 2004

கலை, வர்த்தகப் பிரிவு

19/01/02 - 8 am

4193

BECON

யாழ்


பாடசாலை/ கழகங்களுக்கிடையிலான சுற்றுப்போட்டிகளுக்கான விண்ணப்ப திகதி 05.02.2002 வரை நீடிக்கப்பட்டுள்ளது. கழகங்களுக்கிடையிலான கூடைப் பந்தாட்டம் (பெண்) சேர்க்கப் பட்டுள்ளது. விபரங்களுக்கு அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

S.K. தங்கவடிவேல்
செயலாளர்.

4249


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

பிரிவு - 1

O/L Day Class

(8.30-2.00)

28 வருட சேவை

ஆரம்பம் 21-01-2002 காலை 8.30மணி

- *இவ்வருடம் 6 பிரிவுகள் மட்டுமே
- *கடமை கட்டுப்பாட்டுடன் நடாத்தப்படும்
- *விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்

C/3289

## விக்னா கல்வி நிறுவனம்

A/L 2004

கலை, வர்த்தக வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன,

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

சனிக்கிழமை 8 மணி

(C/3287)



இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 18.01.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.